பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 14 வியாழக்கிழமை (30-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:277

# யுத்தநிறுத்தம் செய்து புலிகளுடன் பேசுவதற்கு அரசுத் தரப்பு தயார்!

## கதிர்காமர் நேற்று அறிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்30

**“விடுதலைப் புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் யுத்தநிறுத்தம் செய்து நேரடிப் பேச்சு நடத்துவதற்கு அரசு தயார்!”**

**- இப்படி நேற்றுத் திருதிப்பென ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது.**

**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றில் இந்தத் திடீர் அறிவிப்பை விடுத்தார்.**

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு ஓர் இணக்கத் தீர்வு காணும் முகமாக பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.கவுடன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்த தற்கான காரணங்களை விளக்குவதற்காக பொ.ஐ.முன்னணித் தரப்பினால் நேற்று கூட்டப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

ஐ.தே.கட்சியுடனான பேச்சு முறிந்ததால் துவண்டுபோன அரசு, நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இந்தத் திடீர் அறிவிப்பை விடுத்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நேற்று அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் எம்.பிக்களைத் தன் பக்கம் இழுக்கவே புலிகளுடன் பேச்சு என அரசு கதைவிடுகிறது

கொழும்பு,ஓக.30

தற்போது தான் எதிர்கொள்ளும் அரசியல் நெருக்கடிகளில் இருந்து தப்பிப்பிழைப்பதற்கான கடைசி ஆயுதமாகவே புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்து, பேசுவது என்ற அறிவிப்பை அரசு விடுத்திருப்பதாக கொழும்பில் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம், புலிகளுடனான பேச்சு போன்ற அறிவிப்புகள் மூலம் -

தற்போது எதிர்க்கட்சிக் கூட்டமைப்பில் இருக்கும் ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் ஆகியவற்றின் எம்.பிக்களைத் தன் பக்கம் திசைதிருப்பி அரசியல் நெருக்கடிகளில் இருந்து மீள முடியும் என்று அரசு கருதுவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது அரசுத் தரப்பில் இருந்து கொண்டு எந்த நேரமும் ஐ.தே.கட்சி பக்கம் பாயும் நிலையில் உள்ள - தொண்டமான் தலைமையிலான - இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதன்மூலம் தொடர்ந்து அரசில் தக்கவைக்கலாம் என்றும் அரசு எண்ணுகிறது.

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலின் விளைவு மற்றும் அதனால் அரசியல், இராணுவ கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மந்த நிலை, யாழ்.குடாநாட்டின் மீது தமது இறுதிக்கட்ட யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாக விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் அச்சுறுத்தல் என்பவற்றைச் சமாளிக்கும் விதத்தில் அரசு இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை விடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

மீண்டும் ஒரு தொகுதி ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் வரையும் யுத்தநிறுத்தம் என்ற பேச்சில் காலத்தை இழுத்தடிப்பதற்காகவும் இந்த அறிவிப்பை அரசு விடுத்திருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்த புலிகள் அதனைத் தொடர்ந்து 4 மாதங்களுகக நீடித்து வந்தனர். எனினும் அப்போது அது குறித்து அலட்டிக் கொள்ளாத அரசு, பேச்சு ஆரம்பிக்கப்பட்டு அதில் முன்னேற்றம் ஏற்பட்டால் மட்டுமே யுத்தநிறுத்தம் குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

கொழும்பு அரசியல் குழப்பங்கள ஒரு நிலையை அடையும்வரை அரசு அறிவித்துள்ள தற்போதைய அமைதி முயற்சியில் நேர்வே அரசு தீவிரமாக இறங்காது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (ம-7)

# திவ்வியனிடம் கைப்பற்றியதாகக் கூறப்படுகின்ற ஆயுதங்களை கொழும்புக்கு அனுப்ப உத்தரவு

## இரசாயனப் பகுப்பாய்வுக்காக

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியனிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதங்களை காங்கேசன்துறையில் வைத்து செயலிழக்கச் செய்துவிட்டு இரசாயனப் பகுப்பாய்வுக்காக அவற்றை கொழும்புக்கு அனுப்பி, பகுப்பாய்வு தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸ் அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார்.

திவ்வியனிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் குறிப்பிடப்படும் ஆயுதங்களை காங்கேசன்துறையில் வைத்து பரிசோதனை செய்வதற்கென கொழும்பிலிருக்கும் அரச பகுப்பாய்வாளருக்கு நீதிமன்றம் அழைப்பு அனுப்பி இருந்தது.

எனினும் தான் யாழ்ப்பாணம் வந்து செல்வது சாத்தியம் இல்லை என்றும் -

எனவே காங்கேசனில் வைத்து ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்துவிட்டு கொழும்புக்கு அனுப்பி வைத்தால் அவை தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்ளமுடியும் என்றும் -

தெரிவிக்கும் கடிதம் ஒன்றை நேற்று யாழ்.நீதிமன்றத்துக்கு அவர் அனுப்பி வைத்திருந்தார்.

இதனை அடுத்தே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

### அரசின் திடீர் அறிவிப்புக்கான

# புலிகளின் பதில் இன்று தெரியும்!

கொழும்பு,ஓக.30

யுத்தநிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று அறிவித்துள்ள ஸ்ரீலங்கா அரசு அது குறித்து புலிகளுக்குத் தெரியப்படுத்தி அழைப்பு விடுத்தால் அந்த அழைப்பைப் புலிகள் ஏற்பார்களா?

இத்தகைய கேள்விக்கான தமது பதிலை விடுதலைப் புலிகளின் பிரமுகர்களிடமிருந்து இன்று பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசின் உத்தியோகபூர்வ அழைப்பு, நோர்வே அரசு மூலமோ அல்லது வேறுவழியிலோ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்குத் தெரிவிக்கப்படும்வரை இத்தகைய அழைப்புக் குறித்து புலிகளின் உத்தியோகபூர்வ பதில் எதுவும் வெளியாகமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அரசுத் தரப்பு அறிவிப்புக் குறித்து புலிகளின் நிலைப்பாடு எப்படி அமையும் என்பது பற்றிய தகவலை புலிகளின் வட்டாரங்கள் இன்று கசியவிடக்கூடும் என்று எதிர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகருடன் நேற்றுப் பேச்சு!

கொழும்பு,ஓக.30

எதிர்வரும் 7ஆம் திகதி கூட்டப்படும் நாடாளுமன்றம், பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட எதிர்க்கட்சியினரின் விருப்பத்துக்கு இசைவான நிகழ்ச்சி நிரல்படியே நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சிகளின் பிரமுகர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று சபாநாயகரை நாடாளுமன்றத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துச் சமர்ப்பித்தது.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேச்சுகள் சுமார் இரண்டு மணி நேரம் தொடர்ந்து இடம்பெற்றன. இந்தச் சந்திப்பில் ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பியின் செயலாளர் விமல் வீரவன்ஸ, சிஹல உறுமய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அதன் நிகழ்ச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.தே.கவுடனான பேச்சு முறிந்ததை அடுத்து

# ஜே.வி.பியைப் பேச்சுக்கு அழைக்கிறார் சந்திரிகா!

கொழும்பு,ஓக.30

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது குறித்து அரசுக்கும், ஐ.தே.கட்சிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் முறிவடைந்ததை அடுத்து ஜே.வி.பியைப் பேச்சு நடத்த வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி நேற்று மாலை ஜே.வி.பிக்கு அனுப்பி வைத்துள்ளார். பேச்சுக்கள் இன்று மாலை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

‘தகுதிகாண் அரசு’ ஒன்றை அமைப்பது தொடர்பான ஜே.வி.பியின் யோசனைகள் குறித்து கடந்த சனியன்று நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் ஜே.வி.பி. தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தனர் என்பதும் -

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து அறிவிப்பதாக ஜனாதிபதி ஜே.வி.பி. தலைவர்களுக்குத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கவை. (ம-7)

# இளம் பெண்ணின் கைகளை சீவி எறிந்த முன்னாள் காதலன்!

திருகோணமலை,ஓக.30

தனது முன்னாள் காதலி, தகப்பனாரின் வற்புறுத்தல் காரணமாக வேறு ஓர் இளைஞனைப் பதிவுத் திருமணம் செய்து, பின்னர் சம்பிரதாய பூர்வ திருமணம் நடக்கவிருந்த சமயத்தில், சீற்றமுற்ற காதலன், காதலியின் வீட்டுக்குள் புகுந்து காதலியின் இரு கைகளையும் வெட்டி எறிந்தார்.

ஒரு கை இரண்டாகத் துண்டுபட்ட நிலையிலும், மற்றைய கை வெட்டப்பட்டுத் தொங்கிய நிலையிலும் சம்பந்தப்பட்ட பெண் ஹெலிக்கொப்டர் மூலம் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்குக் கொண்டு விரையப்பட்டார்.

இந்தக் கோரச்சம்பவம் திருகோணமலை நகரில் நேற்றுக்காலை நடந்துள்ளது.

பிராமண குலத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவரின் மூத்த தாரத்து மகளான - 19 வயதுடைய - இளம் பெண்ணுக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

இன்னும் இரண்டொரு நாள்களில் திருமணம் நடக்கவிருக்கையில் தனது முன்னாள் காதலனின் கோரத் தாண்டவத்துக்கு அந்த இளம்பெண் இலக்கானார்.

வெட்டுண்ட பின்னரும் சேதமாக்கப்பட்ட கையை பாதுகாத்து, ஜஸில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## “ஆயுதக் குழுவினால் இயக்கப்படும் ஊடகம் ஒன்றே ‘சங்கிலியன் படை’யின் பிரசுரத்துக்குப் பின்னணி!”

மகேஸ்வரன் எம்.பி. கூறுகிறார் 3ஆம் பக்கத்தில்

# உலகத் தமிழ் ஆசிரியர்களின் 5ஆவது மாநாடு சிங்கப்பூரில்

## செப்ரெம்பர் 6 முதல் 8ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம்,ஓக.30

ஐந்தாவது உலகத் தமிழாசிரியர் மாநாடு அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவிருக்கின்றது.

இந்த மாநாட்டின் கருப்பொருள் 'தமிழ் கற்றல் கற்பித்தலில் புத்தாக்கம்' (Innovations in the Learning and Teaching of the Tamil Language) என்பதாகும்.

★ தமிழ் கற்றல் கற்பித்தலில் மேம்பாடு காணத் திட்டமிடுதல் -

★ தமிழ் கற்பித்தலிலும் கற்றலிலும் மேலும் பல வகையான புதிய அணுகுமுறைகளைக் கையாள வழிவகைகள் காணுதல் -

★ உலகத் தமிழ் ஆசிரியர்களுக்கிடையே தமிழ் கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துப் பரிமாற்றம் செய்தல் -

★ உலகத் தமிழ் ஆசிரியர்களிடையே அணுக்கத் தொடர்பு ஏற்பட வழிவகுத்தல் -

ஆகிய விடயங்களை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு கூட்டப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

வெளிநாடுகள் பலவற்றில் இருந்து பல தமிழறிஞர்களும், ஆசிரியர்களும் இந்த மாநாட்டில் பேராளர்களாகவும், பார்வையாளர்களாகவும் பங்குபற்றவுள்ளனர்.

'தமிழ் கற்றல், கற்பித்தலில் சிந்தனைத் திறன்' -

'இலக்கணம் கற்றல், கற்பித்தலில் புதிய சிந்தனைகள்' -

'பயிற்று கருவிகளில் புத்தாக்கம்' -

'கணனி வழி நேரடிக் கற்பித்தல்' -

'தமிழ் கற்றல், கற்பித்தலில் புதுமையைக் கொணர்வதில் தமிழாசிரியர் பங்கு' -

ஆகிய தலைப்புகளில் மாநாட்டில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்களும் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். (ஐ)

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை டக்ளஸின் அமைச்சுடன் இணைப்பு

கொழும்பு,ஓக.30

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அந்த அமைச்சில் இருந்து நீக்கப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் செயற்படும் 550 சிமெந்து விநியோக நிலையங்களும் தற்போது வடக்கு புனர்வாழ்வு அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ளன. சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைமைப் பணியகம் மட்டுமே தற்போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் அமைச்சின் கீழ் செயற்படுகிறது.

இதற்கு முன்னர் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, கைத்தறி நெசவுத் திணைக்களம் ஆகியனவும் அமைச்சர் பீரிஸின் அமைச்சுடன் இணைக்கப்பட்டிருந்தன. பின்னர் அவை தவறுதலாக இணைக்கப்பட்டுவிட்டன எனக்கூறி அவை நீக்கப்பட்டன. (ம)

## இந்த ஆண்டும் செப்ரெம்பர் இறுதியில் வடக்கு - கிழக்கில் போலியோ சொட்டுமருந்து வழங்கப்படும்

திருகோணமலை,ஓக.30

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டும் இளம்பிள்ளைவாத நோயினைத் தடுக்கும் வகையிலான போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி துரைசாமி தவக்கொடிராஜா தெரிவித்தார்.

அடுத்தமாதம் 22 ஆம் திகதியும் ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதியும் சொட்டுமருந்து வழங்கப்படும்.

1995 ஆம் ஆண்டில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரை இந்த போலியோ சொட்டு மருந்தினை வழங்கும் நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் இளம்பிள்ளைவாத நோயினை முற்றாகவே அழிக்கும் வகையில் 2002ஆம் ஆண்டு வரை விசேட ஏற்பாட்டின் கீழ் தொடரவுள்ளதாகவும் வைத்திய அதிகாரி து. தவக்கொடிராஜா தெரிவித்தார். (ம)

## நீதிமன்ற சிற்றூழியரை நிரந்தரமாக்க நேர்முகப் பரீட்சை இங்கு நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஓக.30

குடாநாட்டு நீதிமன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் சிற்றூழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சையை நீதி அமைச்சு குடாநாட்டில் நடத்த இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சை இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெறவுள்ள போதிலும் குடாநாட்டில் பிறிதொரு திகதியில் நடத்தப்படும் என்று நீதி அமைச்சு அறிவித்துள்ளது.

குடாநாட்டில் இருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் இங்கிருந்து கொழும்பு செல்வதில் உள்ள சிரமங்களை யாழ் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நீதி அமைச்சு செயலாளர் கே.ஏ.எஸ். குணசேகரவுடனும் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுடனும் தொடர்புகொண்டு எடுத்துக் கூறியதை அடுத்து -

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை குடாநாட்டிலேயே பிறிதொரு திகதியில் நடத்த அவர் இணக்கம் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## கந்தபுராண படிப்பு பூர்த்திவிழா

கோப்பாய்,ஓக.30

மிருசுவில் வடக்கு அருள்மிகு அரசடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெற்று வரும் கந்தபுராணப் படிப்பு பூர்த்தி விழா இன்று காலை 7.00 மணிக்கு நடைபெறும்.

பூஜை, அபிஷேகத்தை தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி உலாவும் இடம்பெறவுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை அன்னதான நிகழ்வும் நடைபெறவுள்ளது. (ம-72)

## கும்பாபிஷேகம்

காரைநகர்,ஓக.30

வண்ணார்பண்ணை, காட்டுத்துறைப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை 7.35 மணிமுதல் 8.10 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக நிகழ்வினை சிவஸ்ரீ நா.மகாதேவக்குருக்கள் சர்வ போதகராகவும், சிவஸ்ரீ ச.சண்முக ராஜேஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும் இருந்து நிகழ்த்தி வைப்பர்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரின் அருளாசியுரையும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணஐயரின் ஆசியுரையும் இடம்பெறும்.

★ ★ ★

காரைநகர்,ஓக.30

கந்தர்மடம் ஆத்திகுடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.21 மணி தொடக்கம் 8.54 மணி வரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில் நடைபெறுகின்றது.

சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக்குருக்கள் தலைமையில் நடைபெறும் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-73)

## அருளுவாய் தாயே!

அம்மையே! தெல்லியூர் துர்க்காவே!
அடியவர் நாம் வேண்டுகின்றோமே!
இம்மையில் இந்தத் தலைமுறை பிழைத்திட
இதய அருள் சுரந்திடு தாயே!

பணத்தின் மீதே பற்றினை வைத்து
பாரினில் வாழ்வை குலைத்திடும் மக்கள்
குணத்தை அழித்தே குவலயம் காப்பாய்
குன்றாம் மனத்தை அருளுவாய் தாயே!

மனிதரை மனிதர் பகைக்கும் நிலை
மண்ணில் நீங்க அருள்தா அம்மா!
புனித நெறிகளைப் போற்றிடும் மனதைப்
புல்லியர் வாழ்வில் தந்திடு தாயே!

போர்புரியும் வாழ்க்கை எல்லாம்
பாரினில் இன்னும் தேவையா அம்மா!
சுதந்திரமான சுகங்களெல்லாம் எம்மை
சூழட்டும் தாயே! தாயே!

சமூகஜோதி
கா. கணேசதாசன்

(தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய இரதோற்சவம் இன்றாகும்)

## ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் நடமாடும் செயலக சேவையில் 50 வீதமான பிரச்சினைக்குத் தீர்வு

காரைநகர்,ஓக.30

ஊர்காவற்றுறை பிரதேச செயலக நடமாடும் செயலக சேவை கடந்த செவ்வாய்க்கிழமை நாரந்தனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குடிதண்ணீர், மின்சாரம், உலர்உணவு நிவாரணம், பிறப்பத்தாட்சிப்பத்திரம், போக்குவரத்து, சுகாதாரம் அடையாள அட்டை, கல்வி உட்பட 457 பிரச்சினைகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டதாகவும் -

அவற்றில் 50 வீதமான பிரச்சினைகளுக்கு உடன்தீர்வு காணப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் குறை நிவர்த்தி சேவையில் யாழ்.செயலகம் மற்றும் பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் அடுத்த நடமாடும் செயலக சேவை காரைநகரில் நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார். (ம-73)

## திருத்த வேலைகள் காரணமாக பஸ்தரிப்பு நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், பஸ்தரிப்பிடங்கள் யாவும் தற்காலிகமாகச் சில தினங்களுக்கு பஸ்தரிப்பு நிலையத்தின் அண்மையில் உள்ள இடங்களுக்கு நாளைமறுதினம் சனிக்கிழமை தொடக்கம் இடம்மாற்றம் செய்யப்படவுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் க.மணிவாசகம் தெரிவித்துள்ளார்.

இடம்மாற்ற விவரங்கள் வருமாறு:-

பருத்தித்துறை மற்றும் கச்சேரி செல்லும் பஸ்கள் யாவும் மணிக்கூட்டுக்கோபுர வீதியையும் ஆஸ்பத்திரி வீதியையும் இணைக்கும் வீதியில் நிறுத்தப்படும்.

தீவுப்பகுதி, காரைநகர் மற்றும் காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி ஊடாகச் செல்லும் பஸ்கள் யாவும் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகக் கட்டடத்திற்கு முன்பாக நிறுத்தப்படும்.

கொடிகாமம் செல்லும் பஸ்கள் யாவும் யாழ். திறந்தவெளி அரங்குப் பகுதியில் நிறுத்தப்படும். (ம-10)

## குளம் புனரமைப்பு

காரைநகர் மேற்கில் புளியங்குளத்தை புனரமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த விவசாயக் குளத்தை புனரமைப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 6 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-73)

உ

யாழ்நகரில் புதியதோர் உதயம்!

மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருஷம் ஆவணித் திங்கள் 14ஆம் நாள் இன்று (30.08.2001) வியாழக்கிழமை காலை 6 மணி முதல் 7.20 மணிக்குள் வரும் சுப முகூர்த்தத்தில்

பியூட்டி சில்க்ஸ்

என்னும் புடவை ஸ்தாபனம் ஒன்றை யாழ். நவீன சந்தை, 69ஆம் இலக்கக் கட்டடத்தில் ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணத்தில் எமது அன்பர்கள், நண்பர்கள், அனைவரையும் வந்து கலந்து திறப்புவிழாவில் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வண்ண வண்ணச் சேலைகளையும் நவநாகரீக நவீன டிசைன்களிலான துணி வகைகளையும் மற்றும் சகலவித ஆடைத் தேவைகளையும் நிறைவு செய்யும் ஒரே ஸ்தாபனம்! உடனே விஜயம் செய்யுங்கள்!!

பியூட்டி சில்க்ஸ்

இல.69, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

(C/18062)

# ஆயுதக் குழுவினால் இயக்கப்படும் ஊடகம் ஒன்றே 'சங்கிலியன் படை'யின் பிரசுரத்துக்குப் பின்னணி!

## மகேஸ்வரன் எம்.பி. கூறுகின்றார்

"யாழ்ப்பாணத்தில் ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுவினால் இயக்கப்படும் செய்தி ஊடகம் ஒன்றே -

அண்மையில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவிகளைத் தூக்கி எறியும்படி 'சங்கிலியன் படை'யின் பெயரில் விடுக்கப்பட்ட நோட்டீஸ்க்குப் பின்னணி."

- இப்படிக் கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

நேற்று யாழ்.நகரில் தாம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

'சங்கிலியன் படை'யின் பெயரில் வெளியான துண்டுப்பிரசுரம் தொடர்பாக பல்வேறு குளறுபடித் தகவல்கள் வேண்டுமென்றே குடாநாட்டில் வெளியிடப்பட்டு வருவதால் தி.மகேஸ்வரனின் பேட்டியை அப்படியே இங்கு பிரசுரிக்கின்றோம்.

இந்தப்பேட்டி தொடர்பாக சம்பந்தப்பட்ட யாரேனும் தங்கள் தரப்பை தெளிவுபடுத்த விரும்பி உதயனுடன் தொடர்பு கொள்வார்களேயானால் அவர்களின் கருத்துக்கும் உதயனில் உரிய இடம் அளிக்கப்படும். (ஆ-ர்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் தூக்கி எறிய வேண்டும் என்று கோரி 'சங்கிலியன் படை' என்ற பெயரில் விரிவான செய்தி ஒன்று குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் பெரிய அளவில் முக்கிய இடம் வழங்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்தச் செய்தி வெளியான தினத்தன்று அது தொடர்பான கடிதமும் எனக்குக் கிடைத்தது.

அன்றைய் தினம் அந்தப் பத்திரிகை நிறுவன ஆசிரியர் பீடத்துடன் தொடர்பு கொண்டு, அந்தச் செய்தியின் உண்மைத் தன்மை குறித்துக் கேட்டேன். அது உண்மையான செய்திதான் என்று பதில் அளிக்கப்பட்டது.

அந்தச் செய்தியின் பின்னணியை நோக்கும் போது, அதில் உண்மை இல்லை என்பதை நான் ஊகித்தேன். இன்று எனது ஊகம் உண்மையாகி விட்டது.

இலங்கையில் உள்ள சகல செய்தி ஊடகங்களுடனும் அதன் செய்தியாளர்களுடனும் அரசியல்வாதிகளாகிய நாம் பரஸ்பர உணர்வுடன் செயற்பட்டு வருகின்றோம். அவர்கள எங்களுக்குத் தகுந்த மதிப்பை அளிக்கின்றனர்.

குடாநாட்டில் நாம் ஏதாவது பிழை செய்தால் அல்லது சமூகத்துக்கு எதிராகச் செயற்பட்டால் தட்டிக் கேட்கும் உரிமை குடாநாட்டுச் செய்தி ஊடகங்களுக்கு தாராளமாக உண்டு. அப்படியான செயலை நாம் வரவேற்கின்றோம்.

### ஆயுதக் குழுவுக்கு ஆதரவாக செயற்படும் ஊடகம்

அத்தகைய உரிமையை, சுதந்திரத்தைப் பேணத் தவறிய குடாநாட்டுச் செய்தி ஊடகம் ஒன்று அரசுக்கும் அரசசார்பு சட்டவிரோத ஆயுதக் குழுவுக்கும் ஆதரவாக அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்மாவட்டத்தில் உள்ள எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை மிரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது. அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல குடாநாட்டில் உள்ள சகல மக்களுக்கும் எதிரான துரோகத்தனமான செயலில் அது ஈடுபட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள எதிர்த்தரப்பைச் சேர்ந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வேறுபாட்டுடன் இருந்தாலும் அவர்கள் ஐவரும் ஒரு விடயத்தில் ஒரே விதமான கொள்கைகளுடனேயே செற்படுகின்றனர்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக -

சுதந்திர விடுதலைக்கு உரிமைக்கு பேரம் பேசாத சக்தியாக -

கடந்த இருபது வருடங்களாக ஒரே தலைவரைக்கொண்டு ஒரே கொள்கையுடன் செயற்படும் அமைப்பாக -

விடுதலைப் புலிகளை இந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏற்றுள்ளனர்.

தமிழ் ஊடகவியலாளர்கள் - செய்தி நிறுவனங்களைச் சேர்ந்தோர் - தமிழ் மக்களின் விடிவுக்காக - சுதந்திரத்தைப் பெறுவதற்காக - பணியாற்ற வேண்டிய பாரிய பொறுப்பை உடையவர்கள்.

இலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள எமது மக்கள், எப்போது எமது மண்ணுக்குத் திரும்புவோம் எனக் கனவு கண்டு அரசின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவோருக்காகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். வன்னியில் தீரம்மிக்க போராட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டங்களுக்கு எல்லாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் ஊடகவியலாளர் கைகளில் உள்ளது.

### துரோகத்தனத்தை அம்பலப்படுத்தியதா?

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஊடகம் ஒன்று இந்தப் பொறுப்புக்களை எல்லாம் புறம்தள்ளிவிட்டு, விடுதலைப் போராட்டத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாகச் செயற்படுவது போன்ற மாயையைக் காட்டிக் கொண்டு, அரசசார்பு ஆயுதக் குழுவை வளர்க்க முனைந்து நிற்கின்றது. அந்த ஆயுதக் குழு தமிழ் இனத்துக்கு எதிராகப் பெருமளவில் மேற்கொண்டு வரும் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தக் கூடிய ஒரு செய்தியைக் கூட இந்த ஊடகம் இதுவரை வெளியிடவில்லை. அதற்கு மாறாக அந்த அமைப்புக்கு தூபம் போட்டு வளர்க்கும் பணியையே மேற்கொண்டிருக்கின்றது.

அந்த ஊடகத்தில் வேலை செய்யும் செய்தியாளர்கள் உட்பட பலருக்கு அந்த ஆயுதக் கும்பல் தனது அரசியல் செல்வாக்கால் அரச வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன.

அந்தக் குழுவின் வளர்ச்சிக்கு துணை போவதுடன் அந்தக்குழுவுடன் சேர்ந்து எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தும் பாணியில் செய்திகளை வெளியிட்டு, விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்ப முனைந்து நிற்கின்றது. குடாநாட்டு மக்களை போராட்ட உணர்வில் இருந்து அந்நியப்படுத்தும் பணியையே அது மேற்கொண்டவண்ணம் உள்ளது.

### தலைவரின் செய்தியை தணிக்கை செய்த ஊடகம்

இதற்குச் சிறந்த உதாரணம் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். நவம்பர் மாதத்தில் தலைவர் பிரபாகரன் மாவீரர் உரையை நிகழ்த்துவார். அந்த உரை ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் இடம் பெறும். அந்த உரையில் தலைவர் பிரபாகரன் என்ன சொல்லப் போகிறார் என்பதை ஜனாதிபதி முதல் படை உயர் அதிகாரிகள் வரை, ஏன சர்வதேசமுமே எதிர்பார்த்துக் கொணடிருப்பது வழக்கமான விடயமாகும். இந்த உரையை குடாநாட்டு மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்த பினனும் கூட கடந்த 1996ஆம் ஆண்டுக்குப் பின்னரும் கூட வரிக்கு வரி வாசிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

கடந்த நவம்பர் மாதம் தலைவர் பிரபாகரன் ஆற்றிய உரையில், குடாநாட்டில் செயற்படும் இந்த சட்ட விரோத ஆயுதக் குழுவைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

அவரது உரையில் அதுதான் முக்கிய விடயம். "இந்தியப் படை இங்கு பெருமாள் தலைமையிலான தேசவிரோதக் கும்பலை வளர்த்தது போல, சந்திரிகா இப்போது இங்கு ஒரு தேசவிரோதக் கும்பலை வளர்த்து இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகின்றார்" என்று தலைவர் பிரபாகரன் அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அந்த உரையில் அந்தக் குழு பற்றி வந்த தகவலை அப்படியே தணிக்கை செய்து இந்த ஊடகம் வெளியிட்டது. ஆனால் மறுநாள் அந்தக் குழுவின் தலைவர், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் அந்த உரைக்கு மறுப்புத் தெரிவித்து விடுத்த அறிக்கையை அவரின் படத்துடன் முன்பக்கத்தில் இதே ஊடகம் வெளியிட்டது.

அந்த ஊடகம் தமிழ் மக்களுக்கு, போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுகின்றது' என்பதற்கு இதுபோன்ற பல உதாரணங்களை வரிசைப்படுத்தலாம்.

தமிழ் மக்களின் மனங்களை துன்புறுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு; சட்டவிரோத ஆயுதக் குழுவின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகச் செயற்படுகின்றது அந்த அமைப்பு.

### அபாண்டமான குற்றச்சாட்டு

கொலை அச்சுறுத்தலை நான், அந்த அமைப்பின் ஆசிரியர்களுக்கு விடுத்ததாக அது செய்தி வெளியிட்டுள்ளது. அவர்களுக்கு எந்தவித அச்சுறுத்தலையும் நான் விடவில்லை. அந்த வகையில் அவர்களுடன் பேசவும் இல்லை. அவர்களைக் கொலை செய்ய வேண்டிய தேவையும் எனக்கு இல்லை. அப்படிச் செய்வதற்கு சட்டவிரோத ஆயுதக் குழுவோ, கையாள்களோ, என் வசம் இல்லை.

ஜனநாயகத்தை, பத்திரிகை சுதந்திரத்தை பெரிதாக மதிப்பவன் என்ற காரணத்தால் எனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்குடன் அந்த அமைப்பு மேற்கொண்டுள்ள சதி வேலையின் வெளிப்பாடே கொலை அச்சுறுத்தல் என்ற செய்தியாகும். இந்தச் சதியின் பின்னணியில் சட்ட விரோத தமிழ் குழுவும் இருப்பது கண்கூடாகத் தெரிகின்றது.

நாடாளுமன்றத்தின் ஓர் அங்கத்தவன என்ற வகையில் என்னைத் தனிப்பட்ட முறையில் விமர்சித்ததன் மூலம நாடாளுமன்றத்தின் சிறப்பு உரிமையை அந்த ஊடகம் மீறியுள்ளது. இது தொடர்பான முறைப்பாட்டை சபாநாயகரிடம் தெரிவிக்கவிருக்கின்றேன். அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது மன்றில் இதுகுறித்து எழுப்பவும் இருக்கின்றேன்.

இது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். அந்தப் பத்திரிகையின் ஆசிரியர்கள் இருவருக்கு எதிராகவும் அந்த நிறுவனத்துக்கும் எதிராகவே இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துளளேன். அந்த ஆசிரியர்களில் ஒருவர் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியராவார் என்றும் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளேன்.

### வன்னி மக்களுக்கு செய்யும் துரோகம்

வன்னியில் எமது மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினை, எரிபொருள் கட்டுப்பாடு ஆகியவற்றை சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டும் வகையில் நாடாளுமன்றத்துக்கு மாட்டு வண்டிலில் செல்லும் போராட்டம் ஒன்றை நடத்தினேன். சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப்போராட்டத்துக்கு ஆதரவு தந்து, அதில் இணைந்து செயற்பட்டனர். அதன் மூலம் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேச சமூகம் வரை செல்ல உதவினர்.

இந்தப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அந்த ஊடகம் செயற்பட முனைவது வன்னியில் இன்னல்படும் மக்களுக்கு இழைக்கும் துரோகமான செயலேயாகும்.

வர்த்தகரான எனக்கு ஏன் அரசியல் என்று அந்த ஊடகம் கேட்கின்றது. வர்த்தகக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவன் நான். தொடர்ந்தும் வர்த்தகம் செய்கிறேன்; செய்வேன்.

நாடாளுமன்றத்தில் அரசு மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்களில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் வர்த்தகர்கள் என்பதை அந்த ஊடகத்துக்கு கூறிவைக்க விரும்புகிறேன்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பலதுறை சார்ந்தவர்களாவர். வர்த்தகர்கள், சட்டத்தரணிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள்; ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள் எனப் பல்துறை சார்ந்தவர்களும் அங்கு இருக்கின்றனர். எம்.பி.பதவிக்கும் வர்த்தகத்துக்கும் தொடர்பு இல்லை என்பதை இனியாவது அந்த ஊடகம் புரிந்து கொள்ளட்டும்.

### கள்ளவாக்கினால் எம்.பியானோரை அம்பலப்படுத்தியதா?

கள்ளவாக்கு மூலம் நான் எம்.பியானதாக அந்த ஊடகம் கூறுகின்றது. கள்ளவாக்கு மூலம் எம்.பியானவர்கள் யார் என்பது அந்த ஊடகத்துக்குத் தெரியாமல் இருந்தாலும் குடாநாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல சர்வதேச சமூகத்துக்கும் அது தெரியும் எனக் கூறிவைக்க விரும்புகிறேன். அந்த ஊடகத்தை நடத்தும் சட்ட விரோத ஆயுதக் கும்பலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் நடக்கின்றன என்பது கூட இந்த ஊடகத்துக்குத் தெரியாமல் இருப்பது வேடிக்கை தான்.

அந்த ஆயுதக் கும்பல் கள்ள வாக்குப் போட்டுத்தான் நாடாளுமன்றத்துக்கு வந்தது என்ற உண்மை குறித்து இதுவரை ஒரு செய்தியை யாவது அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கின்றதா? அம்பலப்படுத்தியதா?

### செருப்பைக் கழற்றி காட்டியதேன்?

நாடாளுமன்றத்தில் நான் செருப்பைக் கழற்றிக் காட்டியது குறித்து உண்மைநிலையை அந்த ஊடகம் புரியவில்லை என்றுதான் கருதுகிறேன். சுயநலத்துக்காக செருப்பைக் கழற்றிக் காட்டவில்லை. சிங்களப் பேரினவாதத்துக்கு சாவுமணி அடிக்கவே அன்று அவ்வாறு செயற்பட்டேன்.

தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நான் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம் குறுக்கிட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான மேர்வின் சில்வா, "நான் உண்மையான பௌத்தன்; கௌரவமான சிங்களவன். இந்த நாடாளுமன்றத்தில் சிங்கள, பௌத்தர்கள் தான் உள்ளனர்" என்று இனவாதத்தைக் கக்கினார்.

அந்த இனவாதத்துக்கு எதிராகத்தான் மானமுள்ள தமிழன் நான் என்பதை அவருக்கு அன்று உணர்த்தினேன். அன்றுடன் நாடாளுமன்றத்தில் இனவாதப் பேச்சுக்கள் நின்றன. சபாநாயகரின் கண்டிப்பான உத்தரவு அதற்குக் கிடைத்தது. இதற்குக் காரணம் யார்? அந்த ஊடகத்தின் சட்ட விரோத ஆயுதக்குழுவா? நானா? என்பதை உணர்ந்தால் போதும்.

### சங்கிலியன் பிரசுரத்தால் கிட்டிய நன்மை

'சங்கிலியன் படை' என்ற பெயரில் அந்த ஊடகம் கடிதம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டதன் பலாபலன் என்ன, தெரியுமா? குடாநாட்டில் உள்ள ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்மக்களின் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படவில்லை, ஆதரவாகச் செயற்படுகின்றார்கள் என்ற அங்கீகாரம் புலிகளிடம் இருந்து வந்துள்ளதுதான். தமிழ்மக்களின் சுதந்திர உரிமைப் போராட்டத்துக்கு தொடர்ந்து நாம் செயற்பட எமக்கு உந்து சக்தியாக புலிகளின் அறிவிப்பு வந்துள்ளது.

'சங்கிலியன் படை' என்ற பெயரில் வெளிவந்த அறிக்கை அப்படியே 'புலிகளின் குரல்' வானொலியில் ஒலிபரப்பானது என்று அந்த ஊடகத்தினால் பரப்பப்பட்ட தகவலும் பொய் என்பது தற்போது ஊர்ஜிதமாகியுள்ளது.

'சங்கிலியன் படை' என்ற பெயரில் வெளிவந்த துண்டுப் பிரசுரம் கூட, சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுவின் ஆசீர்வாதத்துடன் அந்தச் செய்தி ஊடகத்தினால் தயாரிக்கப்பட்டு, போட்டோ பிரதி செய்யப்பட்டு பல இடங்களுக்கும் அஞ்சல் செய்யப்பட்டது.

### பாலசிங்கத்தின் மறுப்பு பிரசுரமாகவில்லை

'சங்கிலியன் படை' என்ற பெயரில் தாங்கள் தயாரித்து வெளியிட்ட 'நோட்டீஸ்'க்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை மிரட்ட முயன்று இந்தப் பத்திரிகை, அந்தத் துண்டுப் பிரசுரத்துக்கும் புலிகளுக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் மறுத்த செய்தியை, இரண்டு நாளகள் ஆகியும் பிரசுரிக்கவில்லை. இது கூட, அந்தத் துண்டுப் பிரசுரத்தைத் தயாரித்து வெளியிட்டது இந்த ஊடகம்தான் என்பதற்கு ஒரு பக்க பலமான சான்று.

இதுகுறித்து சில பிரமுகர்கள் அந்த ஊடகத்துடன் தொடர்புகொண்டு, புலிகளின் மறுப்பை ஏன் பிரசுரிக்கவில்லை என்று கேட்டபோது, "துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்கள் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்குக் கீழ் உள்ளவர்கள்தான். தமிழ்ச்செல்வனுக்கும் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் கொழுவல். அதுதான் அன்ரன் பாலசிங்கம் மறுத்துள்ளார்" - என்று சம்பந்தப்பட்ட - கொக்குவில் இந்துக கல்லூரியில் படிப்பிக்கும் - பத்திரிகை ஆசிரியர் கூறுகின்றார். இது அவர் எந்த ஆயுதக்குழுவுக்காக இயங்குகின்றாரோ அந்தக் குழுவின் பாணியில் அளிக்கப்படும் பதிலாகும்.

மக்களின் போராட்டங்களுக்கு நாடாளுமன்றம் மூலம் வரும் தடைகளை அகற்றி அவர்களின் போராட்டம் வீறுடன் முன்னெடுக்கப்பட்ட தேவையான உதவிகளைச் செய்வதே நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும். பிரதான பணியும் ஆகும். நாடாளுமன்றங்களுக்குச் செல்லும் ஒரு சிலர், தமிழ் மக்களுக்கு துரோகம் விளைவிக்கும் செயலில் ஈடுபடுவதை மக்கள் மன்னிக்க மாட்டார்கள். அவர்களுக்கு பக்கத்துணையாகவும் போராட்டத்துக்கு விரோதமான முறையிலும் செயற்படும் ஊடகத்தை மக்கள் நிராகரிக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

எந்தவிதமான இடர் வந்தாலும் மக்கள் பணிக்கான இந்தப் பதவியை தூக்கி எறியமாட்டோம். விடுதலைப் புலிகளுக்கும் போராட்டத்துக்கும் நாடாளுமன்றக் கதிரைகள் எப்போது தடையாக வருகின்றதோ அந்த நேரத்தில் இந்தப் பதவியை - இனத்தின் விடுதலைக்காக - தூக்கி எறியத் தயங்கமாட்டோம்.

அதுவரை மக்களின் போராட்டத்துக்கு எதிரான இந்தச் சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கும் அடி பணியப் போவதில்லை.

என்மீது சம்பந்தப்பட்ட ஊடகம் சுமத்தியுள்ள அபாண்டமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக நீதிமன்றம் மற்றும் நாடாளுமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்கவிருக்கின்றேன். நான் வெளியிடும் அறிக்கைகள் மற்றும் வானொலியில் ஆற்றும் உரைகள் ஆகியவற்றை வேறு யாரோ எழுதித் தருவதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

யாழ். பரியோவான் கல்லூரியில் உயர்தர வகுப்பு வரையில் கல்வி கற்ற நான் இரு மொழிகளையும் சரளமாகக் கையாளக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளேன். சுயமாகச் சிந்தித்து, சுயமாக எழுதி எனது கருத்தை வெளியிடக் கூடிய ஆளுமை எனக்கு உண்டு. அத்தகைய ஆற்றல் என்னிடம் இருப்பதை அறிந்தே யாழ். மக்கள் தமது வாக்குகளைத் தந்து என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பினார்கள்.

அந்த ஊடகத்தைப் போல கள்ளத் துண்டுப்பிரசுரம் அடிக்கும் வகையில் செயற்படுபவன் அல்லன் நான். எனது உரைகளை, அறிக்கைகளை தயார் செய்யும் சகல வல்லமையும் எனக்கு உண்டு. நான் தமிழைக் கொலை செய்யும் அறிக்கைகளை - செய்திகளை - வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது போராட்டத்துக்கும் சார்பாகச் செயற்படுவதாக வெளியில் காட்டிக் கொண்டு, சட்டவிரோத ஆயுதக் குழுவின் செயற்பாட்டுக்கு உறுதுணையாகச் செயற்படும் அந்த ஊடகம் எமக்கு எதிராகவும் போராட்டத்துக்கு எதிராகவும் செயற்பட இனியும் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள் - என்றார்.

# சமய சந்நிதிகளில்

தென்கோவை இருபாலை ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தான நூதன நவக்கிரக மூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். (க-4)

★ ★ ★

வட்டுக்கோட்டை உலக்கைப்பளச்சி பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு இடம்பெறவுள்ளது. (க-4)

★ ★ ★

ஆனைக்கோட்டை, உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகிறது. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் மாலை 5.30மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடும், 8 ஆம் திகதி காலை திருநாள் திருப்பலி, திருச்சொரூபதேர்ப்பவனிசொரூப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவு பெறும்.

★ ★ ★

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.10 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 11 தினங்களுக்கு நடைபெறும் இத்திருவிழா நிகழ்வில் எதிர்வரும் 9 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

தேர்த்திருவிழா அன்று மாலை 5.30 மணிக்கு உரியடி உற்சவம் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் சிவத்திரு வ. குமாரசாமி ஐயரின் 'மகா பக்த விஜயம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும் (க-15)

★ ★ ★

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய திருவிழாத் திருப்பலிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

இன்றைய திருப்பலி சிறுவர்களுக்கான விசேட திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படவுள்ளதாகவும் ''குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்'' என்ற கருப்பொருளில் வழிபாடுகள் நடைபெறும் என்றும் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு. பொனிபஸ் அடிகளார் தெரிவித்தார். (க-6)

★ ★ ★

கட்டுடை, கேலன்காமம் வீதி, ஸ்ரீ நாகமகேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் புனராவர்த்தன பிம்ப பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.21 மணி தொடக்கம் 8.54 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.


## வடமராட்சி லயன்ஸ் கழகம்

இலங்கை நிர்வாக சேவை
பரீட்சைக்கான
(திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட)

## இலவச பயிற்சி வகுப்புகள்

இடம்: புலோலி மெ. மி. த. பாடசாலை — மந்திகை
காலம்: 02—09—2001 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி
திரு. M. நடராஜசுந்தரம்
(பீடாதிபதி — வணிக முகாமைத்துவம்)
04—09—2001 செவ்வாய் பிற்பகல் 3.00 மணி
கலாநிதி K. குணராசா (பிரதேச செயலர்)
திரு. A. குமாரவேல்.

(91731)　　　　- செயலாளர்


அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம்

# 168 இலட்சம் ரூபா செலவில் குடாநாட்டில் அபிவிருத்தி பணிகள்

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டு இறுதிக்குள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் 168 லட்சம் ரூபா செலவில் மேலும் பல நுண்கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

★ இடம்பெயர்ந்து நீண்டகாலமாக நலன்புரி முகாம்களில் வசிப்போருக்குத் தனியார் காணிச் சொந்தக்காரர்களின் சம்மதத்துடன் உடுவில் மற்றும் பருத்தித்துறைப் பிரதேசச் செயலர் பிரிவில் அரை நிரந்தர வீடுகள் அமைப்பதற்கு — 60 லட்சம் ரூபா.

★ தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் இயங்கும் பாடசாலைகளுக்கான மாணவர் கதிரை, மேசைகளுக்கு — 38 லட்சம் ரூபா.

★ சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து உடுவில் மற்றும் கரவெட்டி பிரதேசச் செயலர் பிரிவில் இயங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மற்றும் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்குத் தற்காலிகக் கட்டடங்கள் அமைப்பதற்கு — 10 லட்சம் ரூபா.

★ நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு மற்றும் எழுவைதீவு ஆகியவற்றுக்கான படகு அம்புலன்ஸ் சேவைக்கு — 24 லட்சம் ரூபா.

★ யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறைக்கு 2 குளிரூட்டிகளுக்கு — 25 லட்சம் ரூபா.

★ நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு — 4 லட்சம் ரூபா.

★ உடுவில் மற்றும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நலன்புரி முகாம்களில் வசித்து வருகின்ற பாடசாலைகளை விட்டு நீங்கிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு — 6 லட்சம் ரூபா.

பருத்தித்துறை மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் அரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும்போது அவற்றின் கூரைகள், மரங்கள் என்பவற்றை எடுத்துச் செல்லவேண்டும் என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

உள்ளூராட்சி ஊழியருக்கு

# ஓய்வூதிய இலக்கம் இதுவரை வழங்கப்படாததால் சிக்கல்!

## கொடுப்பனவைப் பெறுவதில் சிரமம்

தென்மராட்சி, ஓக. 30

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு விதவைகள் அநாதைகள் ஒய்வூதியத் திட்டத்துக்கான இலக்கங்கள் இதுவரை மாகாண சபையினால் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கென மாதாந்தம் ஊழியரின் சம்பளத்திலிருந்து உதவுதொகை கழிக்கப்பட்டு மாகாண விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற போதிலும் மாதாந்தம் அனுப்பப்படும் பட்டியலில் ஊழியரின் இலக்கமில்லாத கணக்குக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டுக்கு முன்னர் கொழும்பு விதவைகள் அநாதைகள் ஒய்வூதியப் பிரிவினரால் நியமனம் வழங்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் ஊழியர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டு வந்ததாகவும், பின்னர் மாகாண சபையிடம் இப்பிரிவு கையளிக்கப்பட்டபோது மாகாண சபைக்குள் உள்ளீர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு புதிய இலக்கம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டபோதிலும் இதுவரை வழங்கப்படவில்லை.

மாகாண சபையினால் உள்ளீர்க்கப்பட்ட பல உள்ளூராட்சி ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளபோதிலும் அவர்களுக்கும் இதுவரை இலக்கங்கள் கிடைக்காததால் மரணமடைந்த ஊழியர்களின் பின் உரித்தாளிகள் விதவை ஓய்வூதியம் பெற்றுக் கொள்வதற்கு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## நூலகக் கட்டடம்

சண்டிலிப்பாய், ஓக. 30

மாதகல் சென் - ஜோசவ் மகாவித்தியாலயத்தில் உலக வங்கி நிதி உதவித்திட்டத்தின் கீழ் புதிய நூலகக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மகா வித்தியாலய அதிபர் க. அழகரத்தினம் தெரிவித்தார். (க-135)

## நிரந்தர நியமனம்

அரியாலை, ஓக. 30

யாழ். ப. நோ. கூ. சங்கத்தில் பணிபுரியும் சமயா சமய பணியாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.


## வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

மேற்படி பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் வேலைகளுக்கு எமது சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இறுதி திகதி:- 2001-09-10 3.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 2001 - 09 - 12 10.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 2001 - 09 - 12 10.30 மணி
   (இச்சமயத்தில் கேள்விப் பத்திரம் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)
4. கேள்விகளை ஏற்கவோ அல்லது மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
5. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% செலுத்தப்படல் வேண்டும்.
6. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | ஜி.எஸ்.ரி. மீளளிக்கப் படாதது |
|---|---|---|---|
| 1. பண்டத்தரிப்பு செபமாதா கோயிலடி முன்பள்ளி அமைத்தல் கட்டம் 1 | 2,000/- | 200/- | 25/- |
| 2. நவாலி தெற்கு கேணி திருத்தமும் புனரமைப்பும் | 500/- | 200/- | 25/- |
| 3. ஆனைக்கோட்டை உதயதாரகை முன்பள்ளி அமைத்தல் | 1,000/- | 200/- | 25/- |
| 4. மாதகல் சப்பில்துறை மயானம் புனரமைப்பு | 1,000/- | 200/- | 25/- |
| 5. பெரியவிளான் இளவாலை சென். அன்ரனீஸ் முன்பள்ளி புனரமைப்பு | 2,000/- | 300/- | 25/- |
| 6. மானிப்பாய் பிப்பிலி மயானம் புனரமைப்பு | 1,000/- | 200/- | 25/- |

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலி. தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம், மானிப்பாய்.
29-08-2001　　　　(சி/18058)



## வாழ்த்துகின்றோம்

லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி, அதிபர்

### Dr. திருமதி கமலலோஜினி பரமசிவம்

அவர்கள் 29-08-2001 இல் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்திக் கௌரவிக்கின்றோம் அவரது சேவை மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

மோ. அ. செல்வராஜா
Dr. சாந்தினி செல்வராஜா
சிந்துஜா செல்வராஜா

38, சோமசுந்தரம் அவனியூ, (குடும்பத்தினர்)
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.　　　　(சி/18056)



## மரண அறிவித்தல்

### தம்பு செல்வநாயகம்

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வநாயகம் 28—08—2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரவியம் (கோண்டாவில்) அவர்களின் அன்புக் கணவரும் சக்திவேல் (கொழும்பு), வளர்மதி, பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் யோகினி, மனோராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆர்த்திகா, ஆரணி, சஞ்ஜீவன், லக்ஸ்மன், வசிதரன், சஜிகலா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30—08—2001) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டு. கிழக்கு,　　　　ம. வளர்மதி (மகள்)
வட்டுக்கோட்டை,　　　　(91740)

உதயன்

## தாயார் வழியில் ஜனாதிபதி சந்திரிகா

தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு சமரசத் தீர்வுகாணும் முயற்சியாக தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது குறித்து அரசுத் தரப்புக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் மூன்று நாள்களாக நடைபெற்ற பேச்சுக்கள் எதிர்பார்க்கப்பட்டபடி பயன் ஏதுமின்றித் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்த அரசியல் நெருக்கடியில் இனி அடுத்த கட்டம் என்ன என்பதுதான் இப்போதைய கேள்வி.

ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துவிட்டது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. எனவே அந்த அரசு இராஜினாமாச் செய்துவிட்டு, எதிர்த்தரப்பு புதிய அரசு அமைத்து, நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும். இதுதான் அடிப்படை ஜனநாயகப் பண்பு; ஜனநாயக நடைமுறை.

ஆனால் ஜனாதிபதி குமாரதுங்க, நிறைவேற்று அதிகாரம் மூலம் தனக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களை வைத்துக்கொண்டு - ஜனநாயக நடைமுறையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு - தனது சிறுபான்மை அரசை பதவியில் தொடரச் செய்வதற்குக் குறுக்கு வழிகள் பலவற்றை நாடுகின்றார்.

ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம் எப்படியும் எதிர்வரும் 7 ஆம் திகதி கூட்டப்பட வேண்டும். அன்று நாடாளுமன்றம் கூடி அதன் அமர்வுகள் நீடிக்குமானால் தனது சிறுபான்மை அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அங்கு நிறைவேற்றப்பட்டு தனது அரசு கவிழும் என்பதும், தனக்கு எதிராகக் குற்றவிசாரணைப் பிரேரணை அங்கு முன்மொழியப்படும் என்பதும் ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு நன்கு தெரியும். அதன் காரணமாக நாடாளுமன்றம் கூடுவதற்கு இடமளிக்க விடாது தடுத்து - ஜனநாயக நெறிமுறைகளை மீறி - தனது அரசைக் காப்பாற்ற விரும்புகின்றார் அவர்.

தற்போதைய தனது அரசு எப்படியாவது ஒக்ரோபர் 10 ஆம் திகதிவரை பதவியில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டால், அதற்குப் பின்னர் இந்த நாடாளுமன்றைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டு விட்டு, தேர்தல் நடைபெறும்வரை மேலும் மூன்று மாதங்களுக்கு - இந்த அரசையே காபந்து அரசாக வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டலாம் என்று அவர் கணக்கிடுகின்றார்.

தற்போதைய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு இன்னும் ஒரு வருடம் பூர்த்தியாகவில்லை. ஒரு வருட ஆயுளைப் பூர்த்தி செய்யாத நாடாளுமன்றை அந்த நாடாளுமன்றமே தீர்மானம் மூலம் கோராவிட்டால் ஜனாதிபதியால் கலைக்க முடியாது என்பது தெரிந்த விடயம்தான்.

எனவே ஒக்ரோபர் 10ஆம் திகதி - இந்த நாடாளுமன்றில் ஒரு வருட ஆயுள் பூர்த்தியாகும்வரை - தனது அரசைத் தொடர்ந்து ஆட்சியில் வைத்திருக்க ஜனாதிபதி சந்திரிகா பகீரதப் பிரயத்தனம் செய்கின்றார். அதன் ஒரு கட்டமாக, தனது இரண்டுமாத கால ஒத்திவைப்பால் செயலிழந்திருந்த நாடாளுமன்றம் மீண்டும் 7 ஆம் திகதி கூடும்போது, அன்றைய தினமே மேலும் இரண்டு மாதங்களுக்கு ஜனாதிபதி அதனை ஒத்திவைக்க முயலக்கூடும்.

1970 பொதுத்தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த இதே ஜனாதிபதியின் தாயார் சிறிமாவோ அம்மையார், அடுத்த பொதுத் தேர்தலை, ஐந்து வருடங்களின் பின்னர் - அதாவது 1975 இல் - நடத்தியிருக்க வேண்டும். ஆனால் புதிய அரசமைப்பைக் காட்டி, தனது ஆட்சியை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்து - தனது ஆட்சிக்காலத்தை ஏழு வருடங்களாக அதிகரித்துக்கொண்டார்.

ஜனநாயக விரோத முறையில் இரண்டு வருடங்கள் ஆட்சியை நீடித்த குற்றத்துக்காக அடுத்த 17 ஆண்டுகள் எதிர்த்தரப்பில் குந்தியிருந்து பல அவலங்களை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி சிறிமாவின் கட்சிக்கு ஏற்பட்டது.

இப்போது அவரது மகள், நாடாளுமன்றப் பெரும்பான்மையுள்ள ஒரு தரப்பு ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்து, ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைப்பதன் மூலம் மேலும் பல அரசியல் தண்டனைகளுக்கு உள்ளாவதற்கு வழிகோலுகின்றார். இந்தத் தவறுகளுக்கு பிராயச்சித்தம் செய்வதற்காக அவரது தரப்பு மேலும் பல ஆண்டுகள் எதிர்த்தரப்பில் இருக்கவேண்டிய அவலம் மீண்டும் வரலாம் என்பதை அவர் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

# வல்வெட்டித்துறை நகரசபை புதிய அலுவலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

வல்வெட்டித்துறை நகரசபையின புதிய அலுவலகத் திறப்புவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நகரசபைத் தலைவர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி க.மயிலேறும்பெருமாள், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ந.மகேந்திரன், வல்வெட்டித்துறை நகரசபை ஓய்வுபெற்ற செயலாளர் பெ.கனகசபாபதி, கட்டடத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் எஸ்.சுந்தரகுமார் ஆகியோரும் கலந்துகொள்வர்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் இ.சிறீகாந்தா ஆகியோர் இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாகப் பங்குபற்றுவர்.

இந்த நிகழ்வின்போது வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் தலைவர்களான து.நவரத்தினம், ச. சிவஞானமூர்த்தி ஆகியோரது உருவப் படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளன. (க-4)

## சாகித்திய விழா போட்டிகள்

வடமராட்சி கிழக்கு,ஓக.30

வடமராட்சி கிழக்கு பிரதேச மட்டத்திலான சாகித்திய விழாவுக்கான போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம்,15ஆம்,16ஆம் திகதிகளில் குடத்தனையில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் வெற்றியீட்டும் நிகழ்ச்சிகளுக்கான பரிசளிப்பும், இறுதிச் சாகித்திய விழாவும் பின்னர் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய முன்றிலில் நடைபெறும் என்று வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபரும், கலை கலாசார பேரவைத் தலைவருமான வி.ப. வேலாயுதபிள்ளையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-182)

## நாட்டு நடப்பு

### கொடியது

*கொடியது கேட்கின் குஞ்சர முகத்தோய்*
*கொடிது கொடிது மொழியினை இழத்தல்*
*அதனிலும் கொடிது தாயகத்தை இழத்தல்*
*அதனிலும் கொடிது அரும் கலைகளை அழித்தல்*
*அதனிலும் கொடிது நம் பண்பினை மறத்தல்*
*அதனிலும் கொடிது ஆதியை மறத்தல்*
*அனைத்திலும் கொடிது அருந்தமிழர் எனச் சாற்றிட அஞ்சி*
*அகதிகளாகி அவனி எங்கும் அலைவதுதானே!*

*- விகடகவி.*

# கிழக்கு மீது கவனத்தைத் திருப்பிவிட்டு குடாநாட்டைப் பிடிக்க புலிகள் திட்டமாம்!

## 'திவயின' பத்திரிகை இப்படிக் கூறுகின்றது

விடுதலைப் புலிகள் கிழக்கிலுள்ள படைமுகாம்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு - கவனத்தை திசைதிருப்பிவிட்டு யாழ்.குடாநாட்டைக் கைப்பற்ற சூட்சுமமாகத் திட்டம் தீட்டிவருகின்றனர் என வடபகுதித் தகவல்கள் தெரிவிப்பதாக 'திவயின' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்திற்கு அமைய அரசை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புலிகள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசுக்கும் ரெலோ அமைப்பிற்கும் பணிப்புரை விடுத்துள்ளனராம்.

தற்போதைய அரசு ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்படும் என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அண்மையில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததை அடுத்தே புலிகளின் திட்டம் வெளியாகி உள்ளதாம்.

அரசு விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பு எனத் தீர்மானித்துள்ளது என்பதும் அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு ஒரு பிரச்சினையாக உள்ளது எனவும் பல வருடங்களாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற புலிகள் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்ததை அடுத்தே புலிகளின் தலைவர் இந்தத் புதிய திட்டத்தை செயற்படுத்துகிறார் எனவும் -

அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

பெரும்பான்மையினரின் சக்தியை எவ்வகையிலேனும் சிதறடிப்பதற்கு முடிந்தளவு அனைத்து வழிகளையும் கையாளுமாறு புலிகளின் தலைவர் தனது உளவுப்பிரிவுக்கு பணித்துள்ளார் எனவும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

## மலேரியா விழிப்புணர்வு துண்டுப் பிரசுரம்

வடமராட்சி கிழக்கு,ஓக.30

வடமராட்சி கிழக்கில் மலேரியா நோய் பரவிவருவதை அடுத்து, அப்பகுதி மக்களுக்கு 'மலேரியா' நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த துண்டுப் பிரசுரத்தை மலேரியாத் தடுப்பு இயக்கமும் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனையும் இணைந்து வெளியிட்டுள்ளன. (க-182)

## சாயி சிந்தனை



### விநயமாகவும் ஆடம்பரமின்றியும் இருப்பவனிடமே அருள் போய்ச்சேரும்

இந்நாளில் அமைதியின்மைக்கும், பூசலுக்கும் மனித மனத்தின் செயல்களே முக்கிய காரணம். தன்னைப் பிறர் விமர்சிப்பதையும் பொறுத்துக் கொள்ளாமல், அவரைப் பழிவாங்க முனைவது மிகவும் தவறான செயல். உன்னை யாராவது தண்டிப்பது என்றால் உன் கெட்ட எண்ணங்கள் தானே தவிர, வேறு யாரும் கிடையாது.

உன்னைத் தண்டிப்பதாக யாரையாவது நீ கருதினால் அவர் வெறும் கருவி மட்டுமே எனப் புரிந்துகொள். உனக்கு நன்மை செய்வதும், உன் நல்ல எண்ணங்கள்தானேயன்றி வேறுயாருமே கிடையாது.

நன்மையும் தீமையும் உன் செயல்களினால் ஏற்படுபவையன்றி வேறுயாரும் அதற்குப் பொறுப்பு இல்லை எனப் புரிந்துகொள்.

இறைவன் ஒரு தபால்காரனைப் போல, இவர் வீட்டில் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறார். மற்றொரு வீட்டில் இன்னொரு கடிதத்தைக் கொடுக்கிறார். முதல் வீட்டில் உள்ளவர்கள் கடிதத்தைப் படித்துவிட்டு சிரிக்கிறார்கள். அடுத்த வீட்டில் உள்ளவர்கள் கடிதத்தைப் படித்து விட்டு "ஓவென" அழுகிறார்கள். இந்த அழுகைக்கும், சிரிப்புக்கும் தபால்காரரா காரணம்? கடிதத்தில் உள்ள விடயங்கள் அல்லவா பொறுப்பு.

கடவுள் ஒரு சாட்சி பூதம். நன்மையும் தீமையும் உங்கள் செயல்களின் விளைவுகள். தற்காலத்தில் மனிதனின் செயல்களில் மேலும் மேலும் அகங்காரம் பெருகியிருக்கிறது. ஆடம்பரமோ சொல்ல வேண்டியதில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கையில் எப்படி அமைதியாக இருக்க முடியும்? இங்கே எப்படிக் கடவுளின் அருள் சுரக்கும்?

நிறையக் கல்வி, செல்வம், பதவி இருந்த போதும், அகங்காரம் நிறைந்து இருந்தால், இறைவன் அருள் கிடைக்காது. நீர்ப் பிரவாகம் கூட பள்ளத்தை நோக்கித்தான் பாய்கிறது. அதே போல இறைவனின் அருளும், விநயமாகவும் ஆடம்பரமின்றியும் இருப்பவனிடமே போய்ச் சேரும்.

*(சனாதன சாரதி 1994 மார்கழி)*

## பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க

# நிவாரணங்களை வெட்ட அரசு ஆலோசிக்கின்றது

கொழும்பு,ஓக.30

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பொதுமக்களுக்கு இதுவரை வழங்கி வந்த நிவாரணங்களில் பலவற்றை வெட்டுவது குறித்து அரசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஓய்வூதியம், சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளில் இதுவரை இலவசமாக வழங்கிவந்த சலுகைகள் பலவற்றை வெட்டுவது குறித்து அரசு கவனம் செலுத்தி வருவதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

துறைமுகம் மற்றும் விமான நிலையம் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள காப்புறுதிக் கட்டண அதிகரிப்பை தொடர்ந்து அரசு எதிர்கொள்ளும் தீவிர பொருளாதார நெருக்கடி காரணமாகவே அரசு இந்த முடிவு குறித்து கவனம் செலுத்தி வருவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## கற்கேணியை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி தென்மேற்கு,ஓக.30

நவாலி தெற்கு - கற்கேணி மீள்புனரமைப்புக்கு 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கற்கேணி திருத்த வேலைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் தெரிவித்தார். (க-185)

## உதயவாக்கு

அடிப்படை மீது எழும்பாத சுவரும் அனுபவத்தின் மீது எழும்பாத ஆலோசனையும் வலுவற்றவை.

## நாளை

ஆவணி 15
வெள்ளிக்கிழமை
திதி: திரயோதசி
முன்னிரவு 11.18 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
வைகறை 5.42 வரை.
ஆவணி ஓணம்
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 6.05 - 7.35
ராகுகாலம் : 10.35 - 12.05
(பழைய நேரப்படி)

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!




மேலேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையில் ஆறு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவ


**சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்**

தொலைத்தொடர்பு சேவை
காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.
உள்நாட்டு தொலைபேசி - 070-212380
வெளிநாட்டுத் தொலைநகல் - 0090-70-212380

**ஓம் சக்தி நகைத் தொழிலகம்**

(தங்கப் பவுண் வியாபாரத்தில் நாணயம் மிக்கவர்கள்)
93, டாக்டர் சுப்பிரமணியம் சாலை, சுன்னாகம்.

**ஐ.பேரம்பலம் அன் சன்**

கோயில் அபிஷேக திரவியங்கள், மருந்துச் சரக்கு வகைகளுக்கும்
- வைத்திய சேவைக்கும் சிறப்பானவர்கள்
வைந்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன்
10, கே.கே.எஸ். சாலை, சுன்னாகம்.

**புகழ் பல்பொருள் களஞ்சியம்**

(பலசரக்கு வியாபாரத்தில் புகழ் பெற்றவர்கள்)
இல.3, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**மங்கை சில்க்**

(மங்கையர் மனங்கவர்ந்த ஜவுளி மாளிகை)
இல.8, நவீன சந்தை, சுன்னாகம். இல.15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ஜெய கிருஸ்ணா**

இரும்பு, பெயின்ற், கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்கள்
20,காங்கேசன்துறை சாலை, சுன்னாகம்.

**சண்யோ கோப்பி & கூல் பார்**

(குளிர்பானப் பிரியர்களின் சொர்க்கம்)
தரமான சிற்றுண்டிகள், குளிர்பானங்களுக்கு எம்மை நாடுங்கள்
இல. 16, பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

துர்க்கையின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக!
திருமதி பாக்கியலக்ஷ்மி - நடராஜா
**பூபாலகிருஷ்ண ஆச்சிரமம்**
224, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

**யோகா ஸ்ருடியோ & வீடியோ**

(புகைப்படப் பிரியர்களின் சொர்க்கம்)
தரமான PHOTOSTATE பிரதிசெய்வோர்.
78, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

ஓம் சக்தி ஓம் - ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் - ஓம் சக்தி ஓம்
**திருமால் அச்சகம்**
(அச்சுவேலைகள், றபர் ஸ்ராம் செய்வதில் நிபுணர்கள்)
393, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

(புத்தக வியாபாரத்தில் புதுமை செய்வோர்)
235, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**பேப்பர் ஹவுஸ் PAPER HOUSE**

(பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகளின் சங்கமம்.)
இல.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தினக்கலண்டர், டயறிகள், பாலர் புத்தக வகைகளுக்கு
**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
கண்டி வீதி, கைதடி.
கிளை: 320, செட்டியார் தெரு, கொழும்பு.
தொலைபேசி : 334004


## மக்களுக்கருள்வாயம்மா!

தெல்லிமா நகரிலே தேசுடன் விளங்கிடும்
தேவி நீ! துர்க்கை அம்மா!
தேரிலே உன்னையே தரிசனம் செய்யவே
தேடியே நாம் வருகிறோம்
தனம் கல்வி வீரமும் சுகமான வாழ்க்கையும்
தந்தெமை ஆண்டருள்வாய்!
மனமாசு நீக்கியே மகிழ்வோடு வாழவே
மக்களுக் கருள்வாயம்மா!

*செல்வி சயந்தினி கனகலிங்கம்*
*ஏ.எல்.கலைப்பிரிவு. யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை.*

## தண்ணருளை மறுப்பதில்லை

அவதூறு செய்பவர் யாராயினும் அம்பாள்
அடிக்காமல் விடுவதில்லை
அன்போடு பணிந்திடும் அடியார்களை அவள்
அணைக்காமல் விடுவதில்லை
புவிமீதில் ஒருபோதும் துர்க்கையாள் யாரையும்
புறந்தள்ளி விடுவதில்லை
பூக்கொண்டு வணங்கிடும் அடியார்களை அவள்
புரக்காமல் விடுவதில்லை
கவிபாடிப் போற்றிடும் அடியார்களை அம்பாள்
கலங்கவே விடுவதில்லை
காணிக்கை அளவினை ஒருபோதுமே அவள்
கருத்திலே கொள்வதில்லை
தவியாய்த் தவித்திடும் உள்ளங்களை அம்பாள்
தனியாக விடுவதில்லை
தாயாகித் தேரேறி வருகின்ற துர்க்கையவள்
தண்ணருளை மறுப்பதில்லை.

*செல்வி துளசி சிவஞானராஜா,*
*ஏ.எல்.கலைப்பிரிவு,*
*யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.*

## நல்ல வரங்களை நல்கிடுவாய்

பசுமை நிறை தெல்லிப் பழையினிலே
பக்தர்களுக் கருள் துர்க்கையம்மா
பாரினில் அனைவரும் வாழ்ந்திடவே
பார்வதியே என்றும் அருள்புரிவாய்.

நாட்டில் நலம் பல சேர்த்திடவே
நன்மை சமாதானம் ஓங்கிடவே
நாட்டை வருத்திடும் போரொழிப்பாய்
நல்ல வரங்களை நல்கிடுவாய்

*ச.காஞ்சனா தரம் - 10*
*யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை*

## எம்மைக் காப்பாய் அம்மா

தேரில் வரும் துர்க்கை
தேசம் போற்றும் துர்க்கை

சின்னவன் என் பாட்டை
சொல்லுகிறேன் கேட்பாய்

பஞ்சம் போக வேண்டும்
பாவம் போக வேண்டும்

தொல்லை தீர வேண்டும்
நன்மை ஓங்க வேண்டும்

எங்கள் துர்க்கை அம்மா
எம்மைக் காப்பாய் அம்மா.

*N.பார்த்திபன்*
*5ஆம் ஆண்டு. யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.*

## எங்கள் துர்க்கை அம்மா

அம்மா துர்க்கை அம்மா
அன்பு கொண்டோம் நாமே
அழகுத் தேரில் வந்தே
அருளைச் செய்வாய் அம்மா!
சின்னக் கூட்டம் நாமும்
சேர்ந்து ஆடி ஓட
எம்மைக் காப்பாய் அம்மா
எங்கள் துர்க்கை அம்மா.

*செல்வி ப.கோபிகா*
*தரம் 1. யா/ஏழாலை*
*சைவ சன்மார்க்க வித்தியாலயம்.*

## மனத்துயர் தீர்ப்பாய் தாயே!

மண்ணிலே வாழும் நாங்கள்
மதிப்பினை இழந்தே விட்டோம்
புண்படு நிலையைப் போக்கி
புதுமையைக் காட்டு துர்க்கா!
எண்ணிலாத் துயரம் எம்மை
என்றென்றும் வாட்டும் கோலம்
மண்ணினில் மாற்றி எங்கள்
மனத்துயர் தீர்ப்பாய் தாயே!

*- செல்வி சி.திவ்யா*

## அருள் மழை பொழிகின்றாள்

நீல ஆழியின் முத்தெனவே
நிலவும் இலங்கா புரியினிலே
சோலை நிறைந்த தெல் லிப்பழையில்
ஆலயம் கொண்டவள் அன்னை துர்க்கை
அழகிய தேரில் அன்னை துர்க்கை
அமர்ந்தே அருள்மழை பொழிகின்றாள்
குழந்தைகள் கன்னியர் கோலதையரும்
கூடி நின்றே வடம் பிடிக்கின்றார்.

*- செல்வி.சி.துஷ்யந்தினி*
*ஆண்டு 11, ஸ்கந்தவரோதயக் கல்லூரி.*

**30-08-2001**



படம்: யோகா ஸ்ருடியோ, சுன்னாகம்.

## தேசம்சிறக்க தேரிலே தேவியைக் காண்போம்!

ஆவணியிலே உத்தராட நாள் தேரேறி
அருளோணம் தீர்த்தம் நல்கும்
அமுதமே நமசிவாய அழகியே தெல்லியூர்
ஆதி துர்க்கா தேவியே" என்று எல்லோரும் பக்திப் பரவசத்துடன் பாடி மகிழும் நாள் இந்தத்தேர்விழா நாளேதான். மஹோற்சவங்களிலே அதி உயர்ந்த நாள் இன்றாகும். இது இரதோற்சவம் என அழைக்கப்படுகின்ற சங்கார உற்சவத்தையே குறிக்கின்றது. பசுபதியாக சிவன், சூரிய சந்திரர்களை சில்லாகவும், சரம் அசரம் ஆகிய பொருள்களை ஒவ்வோர் உறுப்புகளாகவும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் நுனியாகவும் கொண்டு எழுந்தருளி, பிரம்மாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்தத் திரிபுரத்தசுரர்களை தன் புன்சிரிப்பினால் எரித்தருளினார். திரிபுர சங்காரத்திற்கு உண்மைக் காட்சியை உணர்த்தி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்து இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது.

தேரேறி வரும் தேவி, தேம்பியழும் எம்மவர்களின் துயர் துடைத்து
தேசத்தின் விடிவுக்காய் பேரருள் பாலிப்பாள் என நாம் நம்புவோமாக.

- செல்வி ஷாலினி புஷ்பநாதன
*தரம் - 8'C'*
*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.*

## உங்களுக்கு...

கடந்த பல ஆண்டுகளாக நாம் தயாரித்து பிரசுரிக்கும் இத்தேர் சிறப்பு மலரினை இவ்வருடம் முழுமையாக மாணவ மணிகளின் கைவண்ணத்தினாலேயே அலங்கரிப்பது என முடிவு செய்து - அதுபற்றிய விவரங்களை எமது பிரதேசத்தில் உள்ள முப்பதுக்கும் அதிகமான பாடசாலைகள், கல்லூரிகளின் அதிபர்களுக்கு அறிவித்திருந்தோம். நாம் எதிர்பார்த்ததை விடக் கூடுதலாக - பல நூற்றுக்கணக்கான ஆக்கங்களை மாணவ - மாணவிகள் அனுப்பி எம்மை உற்சாகப்படுத்தி உள்ளனர். கவிதைகள், கட்டுரைகளை அனுப்பிய அனைத்து மாணவச் செல்வங்களுக்கும், அவர்களின் அதிபர்கள், வகுப்பாசிரியர்கள், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியறிதலை இத்தால் தெரிவிப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

மாணவர்களின் ஆக்கங்கள் யாவும் புகழ்பூத்த எழுத்தாளரும், முன்னாள் அதிபருமான மூதறிஞர் திரு.எஸ்.சிவசரவணபவன் (சிற்பி) ஐயா தலைமையிலான குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு தரமானவை பிரசுரத்திற்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்ட போதிலும், மலரின் இடப்பருமனுக்கேற்ப பிரசுரமானவை தவிர ஏனைய பல ஆக்கங்களை பிரசுரிக்க முடியாமல் போனமைக்கு வருந்துகிறோம். ஆக்கங்களைத் தரம்பிரித்து உதவியமைக்காக சிற்பி ஐயா தலைமையிலான குழுவினருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இந்த மலரில் பிரசுரமாய் உள்ள ஆக்கங்களை அனுப்பிய மாண - மாணவியருக்கு நாளை வெள்ளிக்கிழமை (31-08-2001) மாலை கொடியிறக்கப் பூஜையின் பின்னர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் பரிசில்கள் வழங்கி கௌரவிக்க உள்ளார். மாணவச் செல்வங்கள் அங்கு பிரசன்னமாகி பரிசில்களைப் பெற்று மகிழுமாறும் வேண்டுகிறோம். எமது மண்ணில் மனமகிழ்வுடன் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல அறப்பணிகளைச் செய்துவரும் "துர்க்காதுரந்தரி" அம்மையாரின் கைகளினால் பரிசுபெறும் மாணவர்கள் பெரும் பேறுடையவர்களேயாம். பரிசு வழங்கிக்கௌரவிக்கும் "சிவத்தமிழ்ச் செல்வி" அம்மாவுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் பூரிப்படைகிறோம்.

இம் மலர் சிறப்புற உதவிய வர்த்தகஸ்தாபனங்களின் உரிமையாளர்களுக்கும் எமது இதய நன்றிகள் உரித்தாகுக. உலகமாசக்தியாகிய ஸ்ரீதுர்க்கா தேவியின் அருள் எல்லோருக்கும் கிடைக்க தேவியின் திருப்பாதங்களில் வணங்கி இறைஞ்சிப் பணிகிறோம். நன்றி வணக்கம்.

சபா புஷ்பநாதன்,
*நிர்வாக இயக்குநர்,*
*துர்க்கா ஸ்ரேஷனேஸ், நீதினி முகவர் தபாலகம், சுன்னாகம்.*


தேரேறும் தேவியின் அருள் எமது வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதாக இன்று வடம் பிடிக்க வாருங்கள் வந்தால் மேல் வீட்டில் இடம் பிடித்தல் எளிது.

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**

புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும் - புதினப்பத்திரிகைகளின் பிரதம முகவரும்
தரமான றபர் முத்திரைகள் (Rubber Stamps) தயாரிப்பவர்களும்.
பஸ்நிலையம் முன்பாக, (C/18043) சுன்னாகம்.


பூ
சு
இறைவ
மதம் சாக்தம்
இச்சக்தி வழி
காணப்பட்ட
அளவிலும்
அம்மன் ஆ
துர்க்கையம்ம
கின்றன.
பூலோகத்
சின்னமாகின்
ளுகின்றாள்.
றாள். அவ்
வஸ்திரம் அ
லில் ரஜோ கு
தமோ குணத்

அ
கோபுர
குல
தேவர்க
திரு
ஏவல்புரி
இல
பாவலர்
பார
மகிழ்கின்றார்
மிளிர்வதுதான்
அமைந்த தெ
கப்பட்ட அ
நிறுவனமாகப்
அரை நூ
இராஜகோபுரம்
திரம், செங்கு
சாலை துர்க்க
மிளிர்வதைக்
காரணகர்த்தா
அம்மையார்
நிகராக வேறு
வாய்ந்த திரு
இங்கு உண்டு
கோயில்
சமூக இலக்க
வேலையை ம

இ
ஆனமா
அழைப்பார்கள்
இருப்பிடம் எ
ஒழுக்கத்துடன்
கொண்டு நடப்
கையினால் இ
ஆலயம். இத
"கோயில்
தொழுவது சால
மக்களைத் தா
இல்லாத ஊர்,
கருத்த வெளி
சித்தர்கள்
வழிபட்டுள்ளா
என்றும் "காய
அழியின் உயி

சு
'தாயிற் சிற
ஒரு நாகரிகத்தி
கொண்டே நிச
சக்தி என்ற சிற
முன்னறி தெய்
தேரோ பவ' எ
தாயாகவும், தே
சைவ சமயத்தி
அன்பு, த
ஆகியவற்றில்
இறைவன் உ
காட்டும் தாயே
டியார் தம்மட
கிறார்கள். இ
வழிபடலாகும்.

# தவி தேர்த்திருவிழா சிறப்பிதழ்



## பூலோக வாழ்வை உணர்த்தும் துர்க்கா தேவியின் சொரூபம்

இறைவனைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடு ஆகும். சக்திக்குரிய மதம் சாக்தம் ஆகும். சிந்து வெளிகாலம், வேதகாலம் ஆகியவற்றிலிருந்து இச்சக்தி வழிபடானது சிறப்பு வாய்ந்ததாகவும், தொன்மை வாய்ந்ததாகவும் காணப்பட்டது. அது இன்றும் அன்றும் சிறப்பான முறையிலும் பெரிய அளவிலும் வளர்ச்சியடைந்திருக்கின்றது. ஈழத்தில் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம், தெல்லியூர் துர்க்கையம்மன் ஆலயம் என்பன சிறப்புமிக்க சக்தி தலங்களாக விளங்கு கின்றன.

பூலோகத்துக்கு எழுந்தருளுகின்ற துர்க்காதேவி தத்துவ விளக்கத்துக்குச் சின்னமாகின்றாள். அவள் மகிஷாசுரமர்த்தினியாக மண்ணுலகுக்கு எழுந்தருளுகின்றாள். சிங்கத்தின் மீது நின்றுகொண்டு அவ்வசுரனை வதம் செய்கின்றாள். அவ்வேளை அவள் மஞ்சள்நிற மேனியுடையவளாகி சிவப்புநிற வஸ்திரம் அணிந்து ஆயுதங்களைக் கையாள்கிறாள். மேலும் முக்குணங்களில் ரஜோ குணத்தின் சின்னமாகிறாள். இந்த ரஜோ குணம் மகிடாசுரனின் தமோ குணத்தை வெல்கிறது. பின்பு அது செல்வமாகவும், கலைகளாகவும், நல்லறிவாகவும், பேராற்றலாகவும் வடிவெடுக்கின்றது. அவைகளை நல்வழியில் பயன்படுத்தி சத்வம் எனும் நடுநிலையின்பால் அது செல்கிறது. பின்பு முக்குணத்துக்கும் அப்பாலுள்ள பரம்பொருளில் ஜீவனை அந்த சக்தியானது கொண்டு சேர்க்கின்றது. இக்கோட்பாட்டை துர்க்காதேவியின் சொரூபம் விளக்குகின்றது. ஆகமங்கள் ஒன்பதுவித துர்க்கையைப்பற்றி கூறுகின்றன. அவள் தன்னைச் சரணடைந்தவர்களின் இன்னல்களைத் துடைக்கின்றாள். மன்னர்களும், வீரர்களும் துர்க்கையை வழிபடுகின்றனர்.

இத்தகைய துர்க்கையானவள்தான் தெல்லியூரிலும் கோயில் கொண்டிருக்கின்றாள். அதுவே தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயமாகும். இது காசியாத்திரை செய்த பல மகான்களாலும், ஞானிகளாலும் ஆசிபெற்ற சிறப்புக்குரியது. இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வாலயமானது கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பழமைவாய்ந்த தலங்களுடன் பூர்வீகத் தொடர்புகொண்டது. இத்தகைய சிறப்புமிக்க துர்க்கையம்மனை வழிபட்டு அவளின் அருட்கடாட்சத்தினைப் பெற்று நாமும் உய்வோமாக!

- செல்வி கர்ணிகா பாஸ்கரக்குருக்கள்
*யாழ்.இந்து மகளிர் கல்லூரி.*

## அறப்பணிகள் பல புரியும் அருள் நிலையம்

**கோபுரஞ்சூழ் மணிமாடக் கோயில் கண்டேன்**
**குனித்தபல அலங்கார வளைவு கண்டேன்**
**தேவர்களும் உவந்தேத்தும் ஸ்தூபி கண்டேன்**
**திருமுறைகள் வேதமோடு ஒலிக்கக் கண்டேன்**
**ஏவல்புரி ஏந்திழையாள் எழிலுங் கண்டென்**
**இளைஞர் பணி சரியை வழி இயற்றக் கண்டேன்**
**பாவலர்கள் பண்ணாரப் பாடக் கண்டேன்**
**பாரபரையின் சந்நிதியில் யாவுங் கண்டேன்** - என்று பாடி மகிழ்கின்றார் அம்பாள் பக்தர் ஒருவர். ஆம் இவ்வாறான சிறப்புக்களுடன் மிளிர்வதுதான் துர்க்காதேவி ஆலயம் ஆகும். யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த தெல்லிப்பழையில் கதிர்காமர் என்ற தேவி உபாசகரால் ஆரம்பிக்கப்பட்ட அருள் நிலையமே இன்று துர்க்காதேவி தேவஸ்தானம் என்ற நிறுவனமாகப் போற்றப்படுகின்றது.

அரை நூற்றாண்டுக்கு முன் கொட்டிலாக இருந்த இக்கோயில் இன்று இராஜகோபுரம், துர்க்கா, புஷ்கரணி, அன்னபூரணி மண்டபம், அன்ன சத்திரம், செங்கழுநீர்தடாகம், சரஸ்வதி மண்டபம், பக்தர்கள் விடுதி, வாகன சாலை துர்க்காநூலகம் போன்ற வற்றுடன் வானளாவ அமைந்து வனப்புடன் மிளிர்வதைக் கண்டு வியக்காதவர் யார் உளர்? இத்துரித வளர்ச்சியின் காரணகர்த்தாக்கள் ஆலய நிர்வாக சபையினரும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களுமே ஆவர். ஈழநாட்டில் துர்க்காதேவி ஆலயத்திற்கு நிகராக வேறு எந்த ஆலயங்களையும் கூறமுடியாத அளவு தனித்துவம் வாய்ந்த நிர்வாகத்திறனும், தன்னிகரில்லாத தலைமைத்துவ மாண்பும் இங்கு உண்டு.

"கோயில் மணியம் என்றால் அது ஆண்பால் ஒருமையே" என்று சமூக இலக்கணம் வகுக்கப்பட்டுள்ள ஒரு சமூகத்தில் ஒரு பெண், மணிய வேலையை மனிதாபிமான ஊழியமாக மாற்றிக்கொண்டுள்ளமை பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தது" என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறும் கருத்து இதனை நன்கு வலியுறுத்தும்.

ஓர் ஆலயம் பன்முகப்பட்ட பணிகளுடன் ஒரு சமஸ்தானம் போல் விளங்குவதற்கும், அது எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதற்கும், ஆலயச் சொத்துக்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கும் இலக்கணம் கூறுவதாக இவ்வாலயம் விளங்குகிறது.

பெண்குழந்தைகளுக்கான இல்லம், அன்னையர்களை அரவணைக்கும் ஆதுலர்சாலை, சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைப்பேணும் நூலகம், இலக்கியங்களை வெளியிடுவதற்கான அச்சுக்கூடம், இளைஞர்களை ஒன்றுபடுத்தி நிற்கும் இளைஞர்மன்றம் போன்ற நிறுவனங்களை ஒன்றுபடுத்தி ஆலயம் ஓங்கி வளர்ந்துள்ளது.

1829ஆம் ஆண்டிலிருந்து மாவிட்டபுர முருகன் விஜதசமி அன்று துர்க்காதேவி ஆலயத்திற்கு வந்து வன்னிவாழை வெட்டும் நிகழ்வும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். துரதிஷ்டவசமாகப் பத்து வருடங்களுக்கு மேலாக இவ்வாறான நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை. இத்தகைய மாவிட்டபுரத் தொடர்புச் சிறப்பும், புராணபடனச் சிறப்பும், சைவசித்தாந்த மகாநாடு நடைபெற்ற சிறப்பும் இவ்வாலயத்திற்கு உண்டு. இவற்றைவிட ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் இவ்வாலயத்தால் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவத்திருக்கோயில்கள் மக்களின் ஆன்மீகத்திற்கு வழிகாட்டுவதுடன் அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும் வேண்டும்.

**"நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடக் கோயில் பரமற்கங்காமே"** என்ற திருமூலரின் வாக்குக்கேற்ப இவ்வாலயம் ஆற்றும் சமூகப் பணிகள் குறிப்பிடத்தக்கன. எல்லாவற்றிற்கும் மணிமகுடமான துர்க்காபுரம் மகளிர் இல்லப்பணி குறிப்பிடத்தக்கது.

- ம.சுமித்திரா *(தரம் - 11)*
*யா/இராமநாதன் கல்லூரி துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.*

## இந்துக்களின் வாழ்வில் ஆலயம்

ஆன்மா லயப்படும் இடம் ஆலயம். இதனை கோயில் என்றும் அழைப்பார்கள். 'கோயில் என்பது கோ + இல் எனப் பிரிந்து இறைவனது இருப்பிடம் என்று பொருள்படும். இந்து மக்கள் தமது வாழ்க்கையில் ஒழுக்கத்துடன் வாழ்வதற்கும் தமது வாழ்க்கையை ஒரு குறிக்கோளுடன் கொண்டு நடப்பதற்கும். இறைநம்பிக்கை அவசியம். அந்த இறை நம்பிக்கையினால் ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தும் இடமே ஆலயம். இதனை அப்பர் சுவாமிகள்,

"கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று ஔவையாரும் கூறி இருக்கின்றார்கள். மக்களைத் தூய்மைப்படுத்தி நேர்வழியில் இட்டுச் செல்லும் இவ்வாலயம் இல்லாத ஊர், ஊர் அல்ல. அது அடவி என்று அப்பர் சுவாமிகள் கருத்து வெளியிட்டார்.

சித்தர்கள் ஞானிகள் போன்றோர் தம் உடம்பைக் கோயிலாகக் கொண்டு வழிபட்டுள்ளார்கள். இதனை "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" என்றும் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக" என்றும் "உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திறம்பட மெய்ஞ்ஞானம் சேரமாட்டார்" என்றும் கூறி உடம்பைக் கோயிலாகக் கொண்டு அதனுள் இருக்கும் உயிரை இறைவனாகக் கொண்டும் வழிபட்டார்கள். இம்மார்க்கங்கள் நம்போன்றவர்களுக்குக் கடினம், எனவேதான் ஆலயம் எனும் தனிப்பெரும் சிகரம் வாழ்க்கையில் மிகவும் அவசியம்.

சைவ நாற்பாதங்களைப் பின்பற்றி முயலுவோருக்கு கோயிலே ஊடகமாகின்றது. தொடக்க நிலைத் தொண்டான சரியைத் தொண்டே முதன்மை பெறுகின்றது. இதனை அப்பர் சுவாமிகள்,

**"நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா**
**நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப"** என்று பாடி இருக்கின்றார்.

ஆன்மீக வளர்ச்சிக்கும் சமூகத் தொண்டிற்கும் உயிர் நாடியாக விளங்குகின்றது கோயில். எனவே ஆலயங்களைப் பேணிப் பாதுகாத்து பயன்படுத்துவதனால் எம் வாழ்வு இம்மை இன்பம் மட்டுமல்லாது மறுமை இன்பத்திற்கும் எம்மை இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

கிருஷ்ணவேணி ரெங்கராஜா
*துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை. (ஆண்டு 13)*

## சக்தி வழிபாடு

'தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை' என்பது காலம் கண்ட பழமொழி. ஒரு நாகரிகத்தின் நிலையைத் தாய்க்குலமாகிய பெண்ணின் நிலையைக் கொண்டே நிச்சயிக்கலாம். தாய்க்குலமே சக்தி குலம். எனவே பெண்ணைச் சக்தி என்று சிறப்பித்தனர் முன்னோர்கள். ஔவையார் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்கிறார். வேதமும் தாயைத் துதிக்குமுகமாக 'மாத்ரு தேவோ பவ' என்கின்றது. எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும், தோழனாகவும், தலைவனாகவும் பக்திசெய்து வழிபடும் மரபு சைவ சமயத்தில் உண்டு.

அன்பு, தாய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றில் சிறந்தவள் தாய். இந்தத் தாயின் அன்பிலும் மேலானது இறைவன் உயிர்களிடத்துச் செலுத்தும் அன்பு. இதனையே *'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ'* என்றும் *'தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்'* என்றும் சைவ அடியார்கள் பாடியிருக்கிறார்கள். இறைவனுடைய திருவருளைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும்.

ஜெ.சுமித்திரா, சி.லாவண்யா
*யாழ்.இந்து மகளிர் கல்லூரி.*


**மலர் அமைப்பு:**
**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
**சுன்னாகம்.**


### பேசாமல் இருப்பதேனோ?

**சீர்பூக்க தெல்லியூரில் சிறப்புறும் துர்க்கா தேவி**
**போர் மேகம் பொழியும் போதும் பேசாமல்**
**இருப்பதேனோ?**
**பாரெல்லாம் பக்தர் உந்தன் பாதங்கள் போற்றுகின்றார்**
**போரையே ஒழித்து நாட்டில் புன்னகை**
**பூக்கச் செய்வாய்.**

- செல்வி.கோ.கம்சத்வனி
*ஆண்டு 9A, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை.*


**தேவியைப் போற்றுவோம் தேறுதலடைவோம்**
★ முத்திரைகள் ★மணியோடர் ★பதிவுத்தபால் ★கடுகதித் தபால்
★தமிழ் - ஆங்கில நூலக சேவை ★றோனியோ ★தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பு
★கடிதம் தயாரிப்பு ★தமிழ் - ஆங்கில தட்டச்சு சேவைகளுக்கு
**நீதினி முகவர் தபாலகம்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

துர்க்கா சரணம் தாயே சரணம்
**தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம்**
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

**ஸ்ரீ முருகன் நகைமாடம்**
(நவீன நகைகளுக்கு நம்பிக்கையானவர்கள்)
25, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**ராஜா மெடிக்கல்ஸ்**
(மருந்துச் சரக்கு வியாபாரத்தில் முதன்மையானவர்கள்)
பிரதான வீதி, சுன்னாகம்.

**சிற்றி பெயின்ற் ஹவுஸ்**
(வர்ணமிகு தீந்தைகளின் ஜால மாளிகை)
14, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**நாகம்ஸ் சினிமா & நாகம்ஸ் பாட்டா**
அங்கீகாரம் பெற்ற பாட்டா விற்பனையாளர்கள்.
நவீன சந்தை, சுன்னாகம்.

துர்க்கையின் அடி பணிந்தோம்
**போட்டோ செலெக்ற்**
**PHOTO SELECT**
298, கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம், சுன்னாகம்.

'அருள் பொழியும் அம்பாள் தேரில் பவனி சிறப்புற வேண்டுகிறோம்'
அம்பாளின் அடியார்களுக்கு அதிசிறந்த ஐஸ்கிறீம் வழங்குவோர்
**குணம் கிறீம் ஹவுஸ்**
வீரவாகுகட்டடம், பஸ்நிலையம், பருத்தித்துறை. | துர்க்காபுரம், தெல்லிப்பழை. | 49, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
T.P. : 070-213048

**செல்வம் கூல் & கோப்பி (B) பார்**
(ருசிமிக்க குளிர்பானங்களின் சங்கமம்)
பிஸ்கட், கேக், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் வழங்குவோர்.
இல. 15, பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.

தரமான போட்டோஸ்ரற் சேவைக்கு
**கௌரி தொலைத்தொடர்பு சேவை**
கே.கே.எஸ். வீதி, மருதனார்மடம்.
☎ 070-212427 வெளிநாடு: 0094 70212424
**கபிலன் தொலைத் தொடர்பு சேவை**
கே.கே.எஸ். வீதி, றொட்டியாலடி.
☎ 070-212718 வெளிநாடு: 0094 70212718

தங்கப் பவுண் நகைப் பிரியர்களின் சொர்க்கம்
**சுபேந்திரன் நகைத்தொழிலகம்**
18, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**
(மாணவர் மனங்கவர்ந்த புத்தக நிறுவனம்)
234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2573 (யாழ்ப்பாணம்)

தேரேறும் தேவியே சரணம் தாயே!
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
(புத்தக வியாபாரத்தில் முதன்மையானோர்)
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பொஸ்கோ BOSCOH**
(பாடசாலை உபகரண விற்பனை முன்னோடிகள்)
இல.3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**சண்லைட் றைக்கிளீனேர்ஸ்**
(போட்டோபிரதி, லமினேட்டிங் விற்பனர்கள்)
23, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# ரெலோ எம்.பிக்களின் அலுவலகத்துக்குள் பொலீஸார் அத்துமீறிப் பிரவேசித்து சோதனை

## சபாநாயகருக்கு முறையீட்டுக் கடிதம்

கொழும்பு,ஓக.30

வவுனியாவில் உள்ள தமது அலுவலகங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலீஸார் சட்ட விரோதமான முறையில் தேடுதல் நடத்தியது குறித்து ரெலோ எம்.பிக்கள் சபாநாயகருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

பொலீஸாரின் இந்த நடவடிக்கையானது தமது சிறப்புரிமைகளை மீறும் செயலாகும் என்று அந்தக் கடிதத்தில் செல்வம் அடைக்கலநாதன், குகனேஸ்வரன் ஆகிய இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இக்கடிதத்தில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொலீஸாரின் இந்த நடவடிக்கை நாடாளுமன்ற அங்கத்தவர்களின் சிறப்புரிமையையும் இந்த நாட்டின் சட்டம் எமக்கு வழங்கும் உரிமைகளையும் அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகும்.

வன்னி மாவட்டத்தில் நாம் மூன்று பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளோம். சமீபகாலமாக வவுனியாப் பொலீஸார் எமக்கு எதிராகப் பல பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது குறித்து நாம் கிலேசமடைகின்றோம்.

இத் தேடுதல் நடவடிக்கைகள் மூலம் எமது சுயமரியாதை, கௌரவம் என்பவற்றுக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் நோக்கம் மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எம்மை நாடி வருவதைத் தடுப்பதாகும். ஆகவே இது பொதுமக்களுக்கும் எதிரான ஓர் அச்சுறுத்தல் நடவடிக்கை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். மக்கள் எம்மைநாடி எமது அலுவலகத்துக்கு வருவது இப்போது குறைந்துள்ளது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறோம்.

இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டிக்கொள்கின்றோம்.

இக்கடிதத்தின் பிரதிகள் பொலீஸ் மா அதிபர், வட மாகாணப் பிரதிப் பொலீஸ் மா அதிபர் மற்றும் வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க)

# தேர்தலுக்கு நன்கொடை ஜனாதிபதி கேட்கிறாராம்!

கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளிடம் இருந்து ஜனாதிபதி நன்கொடை கோரியிருப்பதாக 'ராவய' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஜனாதிபதி அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின்(Board) தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், கட்சியின் தேர்தல நிதியாக அனைத்துக் கூட்டுத் தாபனங்களும் தலா 5 லட்சம் ரூபா வீதம் நன்கொடை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த வரையறைக்குள் 67 கூட்டுத்தாபனங்கள் அடங்குகின்றன. இதன்படி தேர்தல் நடவடிக்கைகளுக்காக இவ்வாறு எதிர்பார்க்கப்படும் நிதி 335 லட்சங்களாகும். தேர்தல் விதிகளின்படி அரச நிறுவனங்களிடமிருந்து இவ்வாறு நிதி சேகரிப்பது முற்றிலுமாக சட்டவிரோதமான செயலாகும் - என்று 'ராவய' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஜ)

## கசிப்பு விற்பனை மும்முரம்

அரியாலை,ஓக.30

நீர்வேலி தெற்கு பூதர்மடம் பகுதியில் கசிப்பு விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இந்தப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்பு பகுதிகளில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதியில் கசிப்பு விற்பனையை சம்பந்தப்பட்டோர் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

30-08-2001

HAPPY BIRTHDAY



செல்வி துஷானி

ஜேர்மனியில் வசிக்கும் தர்மராசா - தீபா

தம்பதியரின் செல்வப் புதல்வி

செல்வி துஷானி

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (30-08-2001) வியாழக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா கைதடியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா சுவிஸில் வசிக்கும் மாமா (நேசன்), மாமி (தயா), லண்டனில் வசிக்கும் சித்தப்பா (ருபன்), கைதடியில் வசிக்கும் அத்தைமார்களான உமா, தயந்தி, சுதா, மாலினி மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென பாசத்துடன் வாழ்த்துகின்றனர்.

கைதடி தெற்கு,கைதடி. சி.தாமோதரம்பிள்ளை (அப்பப்பா) (91679)



## 90ஆம் நாள் நினைவலைகள்

ஆறுமுகம் கந்தப்பு

*(ஓய்வுபெற்ற C.T.B. சாரதி)* அவர்களின் புதல்வன்

மலர்வு 13 - 11 - 1981



உதிர்வு 04 - 06 - 2001

செல்வன் கந்தப்பு இராகுலன்

*(2001ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவன் - யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)*

எங்கள் அன்பு நண்பனே! இராகுலனே!!

உங்கள் நினைவாகவே நிதமும் வாழ்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.* (91701)

பிரிவால் வாடும்: நண்பர்கள், நண்பிகள்.





உ

ஹரி ஓம் நாராயணாய நம

அளவெட்டி நாகேஸ்வரம்

ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

31.08.2001 - 11.09.2001

மெய்யன்பர்களே,

நிகழும் விஷு வருடம் ஆவணி மாதம் 15ஆம் நாள் வெள்ளிக்கிழமை (31-08-2001) தொடக்கம் ஆவணி மாதம் 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (11-09-2001) வரை மேற்படி உற்சவம் நிகழும். அன்பர்கள் அனைவரும் தரிசனை செய்து இஷ்டசித்திகள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொடி ஏற்றம்:- ஆவணி 15ஆம் திகதி (31-08-2001) வெள்ளி நண்பகல் 12-10மணி

தேர்-வீதி வலம்:- ஆவணி 24ஆம் திகதி (09-09-2001) ஞாயிறு முற்பகல் 10-45மணி

உறியடி உற்சவம்:- ஆவணி 24ஆம் திகதி (09-09-2001) ஞாயிறு மாலை 5-30மணி

ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை:- ஆவணி 25ஆம் திகதி (10-09-2001) திங்கள் காலை 8-30மணி

தீர்த்த உற்சவம்:- ஆவணி 25ஆம் திகதி (10-09-2001) திங்கள் முற்பகல் 10-30மணி

ஆஞ்சநேயர் வைரவர் பொங்கல் அபிஷேகம் : ஆவணி 26ஆம் திகதி (11-09-2001) செவ்வாய் காலை 8-30மணி

திருக்கல்யாணம் :- ஆவணி 26ஆம் திகதி (11-09-2001) செவ்வாய் பிற்பகல் 2-30 மணி.

### விழாக்கால நேர ஒழுங்குகள்

காலை 7.00 மணி பூசை — பி.ப.2.15 மணி கலை நிகழ்ச்சிகள்

காலை 8.00 மணி அபிஷேக-பூசைகள் — பி.ப.3.15 மணி தம்ப பூசை

மு.ப.10.00 மணி தம்ப பூசை — பி.ப.4.00 மணி சொற்பொழிவு

மு.ப.10.45 மணி திருவாய்மொழிப் பிரார்த்தனை — பி.ப.5.00 மணி வசந்த பூசை

மு.ப.11.00 மணி வசந்த பூசை

பிரதமகுரு:- சிவஸ்ரீ பரம.சண்முகசுந்தரக் குருக்கள் (அளவெட்டி)

நிரந்தர பூசகர்கள்:- சிவத்திரு.கு.ஞானசுதன், சிவத்திரு.தி.வரோதயன்.

மங்கள வாத்தியம்:- அளவையூர் ஸ்ரீகுமார் குழுவினர்

சொற்பொழிவு:- சிவத்திரு. வ.குமாரசாமி ஐயர்

விடயம்:- ★ மகா பக்த விஜயம் ★

*நாகேஸ்வரம், அளவெட்டி.* - பொறுப்புரிமை பரிபாலன சபை-

விளம்பர அன்பளிப்பு:- கல்யாணி கிறீம் ஹவுஸ், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (91637)



உ

சிவமயம்

வட்டுக்கோட்டை - உலக்கைப்பளச்சி

அருள்தரு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் உடனுறை வீரபத்திரசுவாமி திருக்கோயில்

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அடியார்களே!

இன்று (30-08-2001) வியாழக்கிழமை காலை 8.15 மணி முதல் 9.15 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் எம்பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

ஆலய நித்தியகுரு: பிரம்மஸ்ரீ சோ.லக்ஷ்மிநாராயண சர்மா

பிரதிஷ்டா பிரதமகுரு: சிவாகம கிரியா தத்துவநிதி பிரம்மஸ்ரீ தாணு.வாசுதேவக் குருக்கள் *(பிரதமகுரு - யாழ். கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் கோயில்)*


சர்வசாதகர்: பிரம்மஸ்ரீ ம.சோமசுந்தரக் குருக்கள் *(காயத்திரிபீடம், இணுவில்)*

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.**

எதிர்வரும் (10-09-2001) திங்கட்கிழமை மண்டலபூர்த்தி எம்பெருமானுக்கு 1009 சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறும். அடியார்கள் தரிசித்து அருள்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(91631) - வீரபத்திர சுவாமியின் அருள்வழி நடக்கும் ஆலய பரிபாலன சபையினர்.





வல்வை நெடியகாடு

திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய

## புதிய வான் உயர் சப்பற வெள்ளோட்ட விழா

காலம்:-இன்று(30-08-2001) வியாழக்கிழமை காலை 8.00 மணி

ஆசியுரை வழங்குவோர்:-

- ★ பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் *(வல்வை வைத்தீஸ்வர ஆலய பிரதம குரு, சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர்)*
- ★ பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா *(சர்வானந்த பீடம், இணுவில்)*
- ★ ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் *(நல்லை ஆதீன முதல்வர்)*
- ★ திரு.M.K.சிவாஜிலிங்கம் *(நகர பிதா, வல்வை)*
- ★ திரு.சு.குகப்பிரதாசன் *(தலைவர், பரிபாலனசபை, ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், வல்வை)*
- ★ திரு.ஆ.சிவசுவாமி *(பிரதேச செயலர், வடமராட்சி வடக்கு)*
- ★ திரு.கோ.சுப்பிரமணியம் *(மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவர்)*

நன்றியுரை:- திரு.ஐ.கா.றஞ்சனதாஸ் *(மேற்படி ஆலய பரிபாலனசபைச் செயலாளர்)*

(91719) - மேற்படி ஆலய பரிபாலன சபையினர்.

# பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்கள் - ரிதீரேகா






NSB
உங்கள் குடும்ப வங்கி

## 25.08.2001இல் நடைபெற்ற பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்களின் 26ஆவது சீட்டிழுப்பில்
## தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் கிளையில் பரிசு பெற்ற 133 அதிர்ஷ்டசாலிகளின் விவரம்

**நான்காவது பரிசு ரூபா 5,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 084 | 12S | 0504 | ஐ. விக்னேஸ்வரன் | அத்தியடி |
| 105 | 08V | 0109 | வி. ஜனார்த்தனகுமாரி | வண்ணார்பண்ணை |

**ஐந்தாவது பரிசு ரூபா 2,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 128 | 15V | 0921 | ரி. சண்முகானந்தன் | நல்லூர் |
| 108 | 12C | 0274 | ஈ. சபாரட்ணம் | நல்லூர் |
| 133 | 14E | 0447 | எஸ். யோகராஜா | யாழ்ப்பாணம் |
| 039 | 10F | 0885 | எஸ். கிருஸ்ணமூர்த்தி | வரணி |

**ஆறாவது பரிசு ரூபா 1,000/=**

| | | | | |
|---|---|---|---|---|
| 060 | 14F | 0296 | எஸ். நாகராஜா | யாழ்ப்பாணம் |
| 134 | 14E | 0240 | ஜெ. பத்மகுமார் | யாழ்ப்பாணம் |
| 090 | 13P | 0095 | ஏ. ஆர். ஜெ. ஜேசுதாசன் | வட்டுக்கோட்டை |
| 156 | 07W | 0817 | ஆர். பிரேமாவதி | நல்லூர் |
| 085 | 13S | 0415 | எஸ். இராகுலன் | இணுவில் |
| 029 | 12P | 0879 | கே. இராஜேஸ்வரன் | கோண்டாவில் |
| 116 | 03S | 0090 | எஸ். கந்தசாமி | சாவகச்சேரி |
| 017 | 10F | 0944 | என். நியேமி | யாழ்ப்பாணம் |
| 062 | 16E | 0946 | ஜி. சங்கரலிங்கம் | கெந்தல |
| 046 | 13S | 0788 | ஏ. எம். ரஞ்சிதா | குருநகர் |
| 004 | 16O | 0184 | எஸ். நந்தகுமார் | திருநெல்வேலி |
| 151 | 07W | 0266 | கே. பிரசாந்தன் | காரைநகர் |
| 017 | 20X | 0734 | ஏ. சனிசன் | நல்லூர் |
| 086 | 15V | 0117 | ஏ. சதானந்தன் | திருநெல்வேலி |
| 125 | 15Y | 0339 | ஜெ. யோகராஜா | கோண்டாவில் |
| 029 | 16O | 0756 | எஸ். கந்தசாமி | சுழிபுரம் |
| 151 | 16N | 0286 | கே. காந்தராஜா | வட்டுக்கோட்டை |
| 142 | 16N | 0456 | எஸ். பாலசிங்கம் | யாழ்ப்பாணம் |
| 011 | 13H | 0179 | ஜி. மாலதி | நல்லூர் |
| 107 | 13S | 0078 | என். சுமித்திராதேவி | அச்சுவேலி |
| 042 | 12S | 0161 | எஸ். சற்குணநாதன் | வேலணை |
| 106 | 15V | 0053 | கே. சுவர்ணா | மானிப்பாய் |
| 127 | 14E | 0054 | கே. தனலிங்கம் | யாழ்ப்பாணம் |
| 056 | 16V | 0666 | பி. கோபாலேந்திரன் | புத்தூர் |
| 031 | 09O | 0390 | எஸ். பொன்னம்பலம் | காரைநகர் |
| 099 | 16U | 0972 | ஈ. தவமலர் | கந்தர்மடம் |
| 072 | 14E | 0617 | பி. ஜெனிரதி | கோப்பாய் |
| 059 | 04E | 0867 | எஸ். ஜெயந்தினி | கோண்டாவில் |
| 064 | 16E | 0408 | ஆர். சுந்தரலிங்கம் | கோப்பாய் |
| 065 | 12P | 0654 | எஸ். கனகலிங்கம் | அச்சுவேலி |
| 066 | 14B | 0401 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 035 | 13H | 0870 | ஈ. உமாகாந்தன் | நல்லூர் |
| 072 | 09A | 0674 | எம். கஜேந்திரன் | சுன்னாகம் |
| 083 | 07N | 0486 | எஸ். சிவரூபன் | மானிப்பாய் |
| 025 | 16E | 0875 | எம். சிவகுரு | மானிப்பாய் |
| 059 | 10F | 0222 | ஆர். கருணாநிதி | கொக்குவில் |
| 119 | 12D | 0584 | பி. சிவசுப்பிரமணியம் | அச்சுவேலி |
| 009 | 20Q | 0051 | பி. நரேன் | வட்டுக்கோட்டை |
| 059 | 10F | 0472 | கே. மோகனதாஸ் | அரியாலை |
| 126 | 09N | 0102 | ஆர். பாஸ்கரலிங்கம் | சுன்னாகம் |
| 123 | 16U | 0124 | எஸ். மஞ்சுளா | சுன்னாகம் |
| 090 | 10F | 0055 | எஸ். செல்வமணி | அச்சுவேலி |
| 079 | 15V | 0150 | அந்தோனிப்பிள்ளை றோய் | யாழ்ப்பாணம் |
| 155 | 13A | 0221 | கே. மதனராசா | சுழிபுரம் |
| 084 | 12S | 0542 | ஐ. விக்னேஸ்வரன் | அத்தியடி |
| 008 | 14B | 0122 | ஆர். விமலன் | கரவெட்டி |
| 094 | 12S | 0429 | ரி. அபர்ணா | அரியாலை |
| 145 | 12C | 0256 | கே. ஒளிவளர்மதி | கொக்குவில் |
| 016 | 09O | 0502 | வி. கிருஸ்ணானந்தன் | உரும்பிராய் |
| 126 | 16U | 0499 | ஜி. சண்முகநாதன் | மானிப்பாய் |
| 073 | 14B | 0544 | எஸ். ரட்ணசிங்கம் | அச்சுவேலி |
| 149 | 14F | 0500 | எஸ். இராஜேந்திரா | வட்டுக்கோட்டை |
| 127 | 14F | 0631 | பி. கந்தசாமி | வரணி |
| 111 | 09N | 0045 | எஸ். சிவராஜன் | கோப்பாய் |
| 001 | 20Q | 0822 | ரி. கெங்காதரஐயர் | புன்னாலைக்கட்டுவன் |
| 025 | 16E | 0770 | எம். சிவகுரு | மானிப்பாய் |
| 002 | 13O | 0831 | எம். தம்பித்துரை | யாழ்ப்பாணம் |
| 021 | 10F | 0361 | எம். ஸ்ரீதரன் | சங்கானை |
| 073 | 13P | 0379 | என். பி. இராஜேஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 077 | 13P | 0101 | வி. யோகசுந்தரம் | கந்தர்மடம் |
| 138 | 13O | 0325 | வி. விஜயரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 048 | 09O | 0232 | கே. சுகந்தன் | யாழ்ப்பாணம் |
| 037 | 05N | 0048 | ஏ. அழகதுரை | புத்தூர் |
| 120 | 14F | 0092 | எம். சகாயராஜா | குருநகர் |
| 145 | 14F | 0760 | கே. பஞ்சலிங்கம் | சுன்னாகம் |
| 142 | 13N | 0326 | என். இராமநாதன் | கொக்குவில் |
| 025 | 14B | 0333 | எஸ். சரண்யா | அச்சுவேலி |
| 027 | 10C | 0119 | எஸ். சுந்தரேசன் | கொக்குவில் |
| 066 | 14B | 0630 | பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 106 | 13N | 0693 | ஏ. அன்னலிங்கம் | சுண்டுக்குளி |
| 110 | 15Y | 0361 | என். பாலச்சந்திரன் | மீசாலை |
| 035 | 12P | 0826 | பி. முருகதாஸ் | கரவெட்டி |
| 086 | 14B | 0698 | ஏ. பூலோகச்சந்திரன் | சங்கானை |
| 043 | 09O | 0280 | ஏ. ஜி. ஜஸ்ரின் | யாழ்ப்பாணம் |
| 056 | 13P | 0999 | ஆர். விக்னேஸ்வரன் | திருநெல்வேலி |
| 084 | 15V | 0407 | ஜெ. வேலாயுதபிள்ளை | சுன்னாகம் |
| 125 | 13A | 0149 | ஆர். வசந்தசெல்வி | மிருசுவில் |
| 030 | 12S | 0505 | வி. சின்னத்தம்பி | அரியாலை |
| 154 | 09N | 0153 | எஸ். சிந்துஜா | அளவெட்டி |
| 051 | 13P | 0390 | ஆர். லதாஜெயவரி | வட்டுக்கோட்டை |
| 109 | 08V | 0364 | என். கஜேந்திரன் | யாழ்ப்பாணம் |
| 011 | 13B | 0081 | என். ரவிமன்னன் | கரவெட்டி |
| 046 | 12P | 0294 | எஸ். பரமேஸ்வரி | வெள்ளவத்தை |
| 077 | 13P | 0486 | வி. யோகசுந்தரம் | கந்தர்மடம் |
| 132 | 15Y | 0704 | ஏ. கீர்த்தனன் | மீசாலை |
| 058 | 07N | 0180 | டி. ஜெகசீலன் | கொக்குவில் |
| 015 | 10F | 0587 | கே. கிருஷாந்தன் | வண்ணார்பண்ணை |
| 144 | 13A | 0449 | வி. உமாதேவி | கரவெட்டி |
| 109 | 12D | 0363 | ரி. கர்ணி | கோண்டாவில் |
| 055 | 13P | 0834 | என். என். ஜே. எல்மோ | யாழ்ப்பாணம் |
| 023 | 20X | 0594 | பி. நாகரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 057 | 13P | 0368 | பி. மனோகரன் | தெல்லிப்பழை |
| 109 | 14E | 0240 | எஸ். மகிழினி | நல்லூர் |
| 049 | 14B | 0863 | ஆர். மகாலிங்கம் | இருபாலை |
| 078 | 09A | 0855 | ஆர். ஸ்ரீவிநாயகம் | சுழிபுரம் |
| 087 | 10C | 0490 | கே. புவனேஸ்வரி | நாயன்மார்கட்டு |
| 088 | 15V | 0643 | எஸ். விஜயகுமார் | உரும்பிராய் |
| 104 | 14E | 0122 | டி. செல்வேஸ்வரன் | மானிப்பாய் |
| 075 | 16X | 0620 | ஆர். ஜெயசேகரன் | கந்தர்மடம் |
| 007 | 20Q | 0765 | பி. ஜோசெலா | கோண்டாவில் |
| 033 | 13B | 0949 | எஸ். சரஸ்வதியம்மாள் | அச்சுவேலி |
| 095 | 12D | 0558 | கே. திருவரங்கம் | யாழ்ப்பாணம் |
| 080 | 14B | 0719 | பி. ஜெயபாலன் | கொக்குவில் |
| 014 | 09X | 0069 | எம். செல்லர் | யாழ்ப்பாணம் |
| 116 | 14F | 0145 | வி. பரம்தில்லைராஜன் | யாழ்ப்பாணம் |
| 074 | 12S | 0256 | ஆர். இராஜேஸ்வரன் | கோப்பாய் |
| 105 | 13P | 0337 | ஆர். கண்ணையா | யாழ்ப்பாணம் |
| 037 | 04V | 0489 | பி. திருமாறன் | நல்லூர் |
| 062 | 13S | 0020 | கே. நாகமணி | சுழிபுரம் |
| 147 | 13A | 0732 | ரி. காயத்திரி | காங்கேசன்துறை |
| 027 | 12P | 0617 | பி. அந்தோனி | நாவாந்துறை |
| 056 | 14F | 0420 | எம். எஸ். வசந்தராஜ் | ஆனைக்கோட்டை |
| 079 | 16X | 0621 | ஆர். ஜெயசேகரம் | கந்தர்மடம் |
| 126 | 01V | 0806 | கே. மகேசன் | யாழ்ப்பாணம் |
| 090 | 10G | 0221 | ரி. பாலேந்திரன் | யாழ்ப்பாணம் |
| 067 | 09A | 0701 | எஸ். யோகராசா | கொக்குவில் |
| 138 | 09N | 0714 | எஸ். சபாரட்ணம் | உரும்பிராய் |
| 098 | 14E | 0216 | எஸ். இருதயமலர் | யாழ்ப்பாணம் |
| 130 | 14E | 0968 | வி. ஸ்ரீஸ்காந்தன் | கொக்குவில் |
| 151 | 16U | 0736 | என். நவராஜா | மானிப்பாய் |
| 003 | 20Q | 0375 | எஸ். இருதயமலர் | யாழ்ப்பாணம் |
| 040 | 12P | 0421 | எஸ். வெற்றிவேலாயுதம் | யாழ்ப்பாணம் |
| 154 | 13A | 0058 | எஸ். ஜெகநாதன் | நல்லூர் |
| 039 | 13H | 0717 | எஸ். தர்மகுலசிங்கம் | யாழ்ப்பாணம் |
| 059 | 12S | 0397 | கே. ஜெகானந்தன் | திருநெல்வேலி |
| 062 | 10F | 0073 | எஸ். அருந்தவம் | உடுப்பிட்டி |
| 153 | 15J | 0316 | ஏ. சிவஞானச்செல்வம் | வட்டுக்கோட்டை |

அதிக சான்றிதழ்களைக் கொள்வனவு செய்து மாபெரும் சீட்டிழுப்பில் பெறுமதி மிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் மாபெரும் சீட்டிழுப்பு வருட இறுதிக்குப் (December) பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

(C/18055)

**தேசிய சேமிப்பு வங்கி**
**யாழ்ப்பாணக் கிளை.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள டீசல் ஜெனரேற்றர்-7500 (71/2 k.V) லிஸ்ரர் England, குளிர்சாதனப் பெட்டி Sisil 80, 60, Deep Cold (டபிள் டோர் - இத்தாலி), வோசிங் மெசின் (றையருடன்) National Japan, Air Condition மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பத்மதேவன், உடுவில் றோட், மருதனார்மடம். T.P.070-212584. (91720)

கொழும்பிலிருந்து பொருள்கள் வந்த வெற்று "கார்போட்" பெட்டிகள் (பெரியது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 39, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (91724)

## இசை வகுப்புகள்

எமது "நியூ வீணாகானம்" இசை மன்றில் வீணை, வயலின், வாய்ப்பாட்டு, புல்லாங்குழல், கிற்றார், ஓர்கன், றெக்கோடர், மௌத் ஓர்கன், மெலோடிக்கா வகுப்புகள். ஆரம்பம்: 01.09.2001. தொடர்பு: வாசுகி ரங்கன், 60, வைமன் வீதி, நல்லூர், 16/2, கச்சேரி நல்லூர் வீதி. (91705)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் தெய்வீக ஏடு மூலம் கடுமையான நோய்க்கு நிகரற்ற வைத்தியம். காண்ட முறையில் பலன் அறிதல். சனி, ஞாயிறு 8.30 a.m.-2.00 p.m. ஆடியபாத வீதி, சரஸ்வதி மில், கொக்குவில் கிழக்கு. (91721)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081. (C/17642)

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் பட்டினத்திற்கு அண்மையில் வீடுகட்டக்கூடிய தோட்டக் காணி ஏறக்குறைய 12 பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு எஸ்.பீ. சிவஞானம், சட்டத்தரணி, வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு. (91729)

## தவறிவிட்டது

இராசதுரை குபேந்திராவின் விசேட அ.அ. (இல.0902014446) ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் கடுக்காயடி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா.இராசதுரை, 31,கடுக்காயடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.(91659)

ஏழாலை வடக்கு, ஏழாலையைச் சேர்ந்த திருமதி சுகிர்தரட்ணம்மா தயானந்தன் என்பவரது தே.அ.அ. (இல.297390163V) கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91718)

அரியரத்தினம் பாலச்சந்திரனின் தேசிய அ.அட்டை (இல.391313008V), விசேட அ.அட்டை (இல.0906014992) இரண்டும் 28.08.2001 அன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அ.பாலச்சந்திரன், டச்றோட், உடுவில், சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91722)

பாடசாலை வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை என்ற முகவரியைச் சேர்ந்த நிரஞ்சினி பரமேஸ்வரன் என்பவரது தே.அ.அ. (இல.785370899V), பல்கலைக்கழக அடையாள அட்டை, மருத்துவபீட அடையாள அட்டை என்பன 27.08.2001இல் நயினாதீவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் அல்லது மருத்துவபீடத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91726)

## விற்பனைக்கு

6"x4" பாலைத் தீராந்திகள் 250 அடி, 13 அடி நீளமுள்ள முழு ஊசிக் கால்கள் 3,வேப்பம் நிலைகளும் யன்னல்களும், சோக்கேஸ், உடுப்பு அலுமாரி என்பன விற்பனைகுண்டு. 66, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (91649)



உ

## திருவருள்மிகு அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான

### மணவாளக்கோல மஹா சங்காபிஷேகம்

*காலம்:* நாளை (31.08.2001) வெள்ளிக்கிழமை

காலை: 7.00 மணிமுதல் 1008 சங்காபிஷேகம்

மாலை: 4.30 மணி தெய்வீகப் பேருரை

**"கணபதி கடாட்ஷம்"**

*நிகழ்த்துபவர்:* செஞ்சொற்செல்வர் **இரா.செல்வவடிவேல்**

6.30 மணிக்கு பூந்தண்டிகை உற்சவம்

- ஆலய பரிபாலன சபையினர்.

*விளம்பர அன்பளிப்பு:*

**மதி சிற்பாலயம்**

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

ஆலய நிர்மாண சிற்பத்துறையில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து அமரத்துவம் அடைந்த சிற்பவாரிதி அராலியூர் மு.மார்க்கண்டு அவர்களின் வழியில் ஜொலித்துக் கொண்டிருக்கும் முத்துகளில் ஒன்று அராலியூர் M.மதியழகன் (91723)

ஞானசம்பந்தர் கலைமன்றம்

## கணனி பயிற்சிநெறி

எமது மன்றத்தின் கணனிப் பயிற்சிநெறிக்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். பயிற்சி நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 09.09.2001 ஆம் திகதிக்குமுன் ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சி நெறி விவரம் MS OFFICE 2000**

- ☆ MS WORD 2000
- ☆ POWER POINT 2000
- ☆ MS EXCEL 2000
- ☆ WINDOW OPERATING SYSTEM
- ☆ MS ACCESS 2000

*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.*

- நிர்வாகம், *ஞானசம்பந்தர் கலைமன்றம்.* (C/18051)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி செல்லையா

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் லண்டனில் வசித்தவருமாகிய திருமதி பரமேஸ்வரி செல்லையா 26-08-2001 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லையாவின் (J.P.) அன்பு மனைவியும், தங்கலிங்கம், சரஸ்வதி, தனலஷ்மி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணசீலன் (லண்டன்), கணேசலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(29-08-2001) லண்டனில் நடைபெற்றன.

தகவல்:- தனலஷ்மி (சகோதரி)

*உடுப்பிட்டி கிழக்கு.* (91725)

UNIVERSITY OF JAFFNA SRILANKA

*FACULTY OF MEDICINE*

ORIENTATION PROGRAMME

The Orientation Programme for the 2001 Batch (New Admission) will commence on 10th September 2001

**Registrar.** (C/18053)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய*

கட்டட புனரமைப்புக்கு பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து, அந்நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை உடன் தந்து உதவியவர்களான,



மாண்புமிகு அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய உயர்திரு. **கா.வே.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும்



வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் உயர்திரு. **ந.திரிலோகநாதன்** அவர்களையும்

*நன்றியுடன் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பாடசாலைச் சமூகம்.

*யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.* (91728)

# உளங்கனிந்த நன்றியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கரணவாய் மேற்கு, கல்லுவம் பிள்ளையார், ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை**

எமது ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக நிதி உதவி வழங்கிய,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரம், இந்து சமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான மாண்புமிகு **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும்



ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ **கே.வி.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களுக்கும்

கரவெட்டி பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளராகிய **திரு.ப.ரவீந்திரன் (ராசிக்)** அவர்களுக்கும்

எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்து, பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்லுவம் பிள்ளையார், வைரவர் கோயில் பரிபாலன சபை, கல்லுவம் வாழ் மக்கள். (91727)

உ

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆவணித்திங்கள் 16ஆம் நாள் சனிக்கிழமை (01-09-2001) காலை 10.40 மணி முதல் 11.45 மணி வரையுள்ள அவிட்ட நட்சத்திரமும் துலாம் லக்கினமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது சகோதரன் திருநிறை செல்வன் **சௌந்தரராஜன்** அவர்களுக்கும்



எமது புத்திரி திருநிறை செல்வி **சிவமலர்** அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ லக்ஷ்மி நாராயண கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி நா.குகநேசன், 22/17, வைரவர் கோயில் வீதி, அரியாலை.

திரு.திருமதி நா.தம்பிஐயா, 9/2, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர்.

(இருவீட்டார் அழைப்பு)

(சி/18054)

# தொழில் நீதிமன்றம் இன்றி யாழ்.மக்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக தொழில் நீதிமன்றங்கள் எதுவும் இயங்காததால் தொழிலாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் தொழிலாளர்கள் தமது பிரச்சினைகளை முறையிடுவதற்கு கொழும்பில் உள்ள தொழில் நீதிமன்றத்துக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர். தர்மலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் —

யாழ்ப்பாணத்தில் தொழில் நீதிமன்றத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எமது தலைமைக்காரியாலயம் ஊடாக தொழில் அமைச்சர் அலவி மௌலானாவுக்கு அறிவித்திருந்தேன்.

இந்த நீதிமன்றத்தை இது குறித்து அமைச்சர் அலவி மௌலானா நீதி அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளதாக எனக்கு அறியத்தந்துள்ளார் — என்றார். (க-4)

## டிரக்-கார் விபத்து

பருத்தித்துறை பஸ்டிப்போ முன்பாக பருத்தித்துறை — யாழ்ப்பாணம்வீதியில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற இராணுவ டிரக் — கார் விபத்தில் கார் சேதமடைந்தது.

தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. (க-15)

# டிசெம்பரில் தேர்தல் நடக்கும்?

கொழும்பு, ஒக. 30

அரசுப் பிரதிநிதிகளுக்கும் ஐ. தே. கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியடைந்ததை அடுத்து திடீர்த் தேர்தல் ஒன்றை அரசு டிசெம்பரில் நடத்தக்கூடிய வாய்ப்பு உள்ளதாக இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது நாடாளுமன்றத்தை உடன் கூட்டவேண்டும் என்று ஐ. தே. கட்சிப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டதாகவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் ஓராண்டு நிறைவான ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதால் —

அதன்பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்தும் வாய்ப்பு உள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)

### வலி. மேற்குப் பிரதேசத்தில்

# காலபோக வேளாண்மைக்கு விவசாயிகள் தயாராகின்றனர்

சண்டிலிப்பாய், ஒக.30

அண்மையில் பெய்த மழையை அடுத்து வலி. மேற்குப் பிரதேசத்தில் விவசாயிகள் காலபோக நெல் விதைப்பை மேற்கொள்வதற்காகத் தங்கள் வயற்காணிகளை உழுது பண்படுத்தி வருகின்றனர்.

எருப்பசளைகளையும் காணிகளில் தூவி உழுது வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை —

இப்பகுதியில் ஏ.ரி- 401 எனப்படும் இனவிதை நெல்லுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. நான்கு மாத கால விளைச்சலைக் கொண்ட இந்த விதை நெல் இப் பிரிவு கமநல சேவை கேந்திர நிலையங்களிலும் கையிருப்பில் இல்லை என்றும் விவசாய சம்மேளனங்கள் தெரிவித்தன, (க-135)

# கடலில் ஆமை பிடித்த 6 பேருக்கு 12ஆயிரம்ரூபா அபராதம் விதிப்பு

வலி. வடக்கு, ஒக. 30

கடலில் சட்டவிரோதமான முறையில் ஆமை பிடித்துக் கொண்டு வந்த ஆறு பேருக்குத் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புப் பகுதியில் கடற்றொழிலை மேற்கொண்டுவரும் சுழிபுரம் மேற்கைச் சேர்ந்தவர்களான பொ. நேசரத்தினம், கு. பொன்னுத்துரை, ச. சந்திரசேகரம், க. சாந்தகுணம், க. தங்கராசா, வ. தம்பிநயினார் ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்டு இளவாலைப் பொலீஸாரிடம் கையளிக்கப்பட்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் இந்த 6பேருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்தார். (க-85)

## மோ. சைக்கிள் காட்சியறை

அரியாலை, ஒக. 30

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் மோட்டார் சைக்கிள் விற்பனைக் காட்சியறை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

கே. கே. எஸ். வீதியில் அமைந்திருக்கும் சங்கத்தின் தலைமைக்காரியாலய கீழ் மாடிக் கட்டடப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் செயற்பட்டு வருகின்றது.

தற்போது இந்த விற்பனை நிலையத்திற்கென தனியான காட்சியறை அமைக்கப்படுகிறது. (க-17)

## ஆலய திருப்பணிகள் துரித கதியில்

சண்டிலிப்பாய், ஒக.30

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் புனருத்தாரண பணிகளும் புதிய திருப்பணி வேலைகளும், தற்போது துரித கதியில் ஆலய பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயத்திலுள்ள பஞ்சமுக விநாயகர் சந்நிதிக்கு தனியான மண்டபமும், வள்ளியம்மன் வாசல் கோபுரமும், யாகசாலையும் புதிதாக அமைக்கப்பட்டு வருவதுடன் வசந்த மண்டபமும், உள்வீதிக் கட்டடங்களும் புனரமைக்கப்படுகின்றன.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் அளவெட்டிப் பகுதிமக்கள் இத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி உதவிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-135)

### தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்

# யாழ். பிராந்திய ஊழியர்களின் இடமாற்றத்தை உடன் நிறுத்துக!

## தலைவருக்கு தொழிற் சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், ஒக. 30

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய ஊழியர்களைவேறு பிராந்தியங்களுக்கு இடம் மாற்றும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய தொழிற்சங்கம் இரத்மலானையிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

வடபிராந்திய தொழிற் சங்கத் தலைவர் அ. செல்வராஜா, செயலாளர் ந.பேரின்பநாதன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். பிராந்திய ஊழியர்களின் இடமாற்ற நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்து தீவிரமாகச் செயற்பட்டுவரும் தற்போதைய முகாமையாளருக்குப் பதிலாக வேறொரு முகாமையாளரை நியமிக்க வேண்டும்.

தற்போதைய முகாமையாளரினால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள், முறைகேடுகள் பற்றி எமது ஊழியர்கள் பல முறை அறிவித்திருந்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவற்றை மறைப்பதற்காகவே முகாமையாளர் யாழ். பிராந்திய அலுவலகத்தை மூடும் முயற்சியிலும், ஊழியர்களை இடமாற்றும் முயற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

அண்மைக்காலங்களில் பல புதிய குடிதண்ணீர்த் திட்டங்களையும், வடிகாலமைப்புத் திட்டத்தையும் செயற்படுத்துவதற்கு பிரதேச சபைகளும், ஏனைய அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன; இதற்காக நிதியுதவிகள் வழங்கவும் பல நிறுவனங்கள் தயாராக உள்ளன.

எமது சபையின் ஏனைய பிராந்தியங்களில் இருப்பது போன்று பட்டயப் பொறியியலாளர் ஒருவரை முகாமையாளராக நியமித்து இந்த அபிவிருத்தி வேலைகளைச் செய்வதன் மூலம் ஊழியர்களும், எமது பிரதேசமக்களும் மிகுந்த நன்மையடைவார்கள்.

எமது பிராந்திய அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட தொலைபேசி வசதியை எமது முகாமையாளர் தனது சொந்த வீட்டிலேயே தொடர்ந்தும் வைத்திருக்கிறார் இதனால் இங்குள்ள ஊழியர்கள் பெருமளவு சிரமங்களையும், அநாவசியச் செலவுகளையும் எதிர்நோக்குகின்றனர்.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து சென்ற ஊழியர்களுக்கான சம்பளப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை. இதனை உடனடியாக வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சீருடைகள், மழைக்கவசங்கள் என்பவற்றையும் வழங்கி உதவ வேண்டும்.

மற்றும் எமது காரியாலயம் தொலைபேசி, பக்ஸ், வாகனம், போட்டோஸ்ரட் போன்ற வசதிகளற்ற நிலையில் இயங்குகிறது. எமது காரியாலயத்துக்கென ஒதுக்கப்பட்ட வாகனம் தற்போது திருமலையில் பாவிக்கப்பட்டு வருவதாக அறிகின்றோம்.

எனவே மேற் கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து எமது பிரதேசத்தில் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்கு வசதியாக இன்றுவரை வெற்றிடமாக இருக்கும் கணக்காளர் போன்ற பதவிகளுக்கு தகுதியானவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இந்தக் கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காதவிடத்து ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்வது தவிர்க்கமுடியாதது என்பதையும் தங்களின் உரிய கவனத்திற்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க-4)

## சமய சொற்பொழிவு

வடமராட்சி, ஒக. 30

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் மஹோற்சவ காலத்தை ஒட்டி, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தினமும் நடத்தி வரும் தொடர்விசுக் கலைநிகழ்ச்சியில் பன்னிரண்டாம் உற்சவமான இன்று வியாழக்கிழமை ''அருள்பெற வழி'' எனும் தலைப்பில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர் சி. நவரத்தினம் சொற்பொழிவாற்றுவார். (க-173)

## மோதிரம் யாருடையது?

வடமராட்சி, ஒக. 30

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு சேவையில் ஈடுபடும் மினிபஸ் ஒன்றில் தங்கமோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரங்களைக்காட்டி பருத்தித்துறை பஸ்நிலையச் சதுக்கத்தில் உள்ள வடமராட்சி சிற்றூர்தி சேவைச்சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என சங்கத் தலைவர் எஸ் சில்வேஸ்ரர் தெரிவித்துள்ளார். (க-173)

## அரியாலை ஆலயத்தில் இன்றுமுதல் பூசை

யாழ்ப்பாணம், ஒக. 30

கடந்த கால இடம்பெயர்வு காரணமாகத் தடைப்பட்டிருந்த அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் பூசைகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு விசேட கிரியைகளுடன் ஆரம்பமாகி தினமும் காலை 10 மணிக்கு ஒருநேர பூஜை நிகழும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (க-4)

### அரிசித் தட்டுப்பாடு காரணமாக

# அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கோழித்தீன் உற்பத்தி தடை

யாழ்ப்பாணம், ஒக. 30

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோழித்தீன் உற்பத்தி நிலையங்களின் பணிகள் தடைப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கிலோ 5 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட அரிசியைக் கொண்டு கோழித்தீன் தயாரிக்கப்பட்டு வந்ததாகவும். தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கோழித்தீன் உற்பத்தி நிலையங்களிலும் முழுமையான செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை என்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள சில களஞ்சியங்களில் அரிசி இருந்தும் கூட எம்மால் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் தற்பொழுது குடாநாட்டில் கோழித்தீனின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கோழித்தீன் உற்பத்தி நிலையங்களுக்கான இயந்திரங்களை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-10)

## பண்டத்தரிப்பில் பற்றைக்காணியில் கசிப்பு மீட்பு

சண்டிலிப்பாய், ஒக. 30

பண்டத்தரிப்பு அம்மன் வீதியில் பற்றைக்காணியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான கசிப்புப் போத்தல்கள் இளவாலை பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டது.

இப்பகுதியில் நீண்ட காலமாகக் கசிப்பு உற்பத்தி, விற்பனை நடைபெற்று வருவதாகப் பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்துக் கடந்த திங்கட்கிழமையன்று இப் பகுதிக்குத் திடீரென வந்த பொலீஸார் தேடுதல் நடத்திக் கசிப்புப் போத்தல்களைக் கைப்பற்றினர். (க-135)

## திருமலையில் தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஒக. 30

திருகோணமலை திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ் விழா எதிர்வரும் 2 ஆம் திகதி திருகோணமலை இ. கி. ச. ஸ்ரீகோணேஸ்வர இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தமிழ் விழாவின் முதலாவது நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இதில் இலக்கியப் பேருரை விவாத அரங்கு, கவி அரங்கு ஆகிய சிறப்பு நிகழ்வுகளுடன் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது நிகழ்வில் ''கலைமுகம்'' நூல்வெளியீடும் கூத்தும் உயிர்ப்பும் என்ற நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன.

இந்த தமிழ் விழாவில் கலந்து சிறப்பிப்பதற்காக யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இருந்தும் கலைஞர் குழு திருகோணமலை சென்றுள்ளது (க-6)

உ
கணபதி துணை

# அகில இலங்கை சபரிகிரி ஐயப்பசுவாமி தேவஸ்தானம்



## ஆவணி ஓணப் பெருவிழா

31-08-2001

**ஐயப்பன் அடியார்களே!**

கட்டுவன் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஐயப்ப சுவாமிக்கு கருங்கல்லினால் சமைக்கப்பட்ட 18படிகளுடன் கூடிய அழகிய ஆலயத்தில் ஐயப்பன் அருளாட்சி செய்து வருகின்றான். இவ்வாலயத்தை உற்றுநோக்கும் போது சபரிமலையிலிருந்து ஐயப்பனை வழிபாடு செய்கின்ற உணர்வு ஏற்படுகின்றது. அப்படியான அமைதியான சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் ஐயப்பனுடைய வழிபாடுகள் யாவும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. தை மகரஜோதி, பங்குனி உத்தரநாள், ஆனி உத்தரநாள், மாத சங்கிராந்தி வழிபாடு, ஆவணி திருவோணநாள் (சபரிமலை ஐயப்பன் குடமுழுக்கு நன்னாள்), கார்த்திகை முதலாம் நாள், மாலையணிதல்(விரத ஆரம்பம்) ஆகிய வழிபாடுகள் கட்டுவன் ஐயப்பன் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் ஆவணி 15ஆம் நாள் நாளை (31-08-2001) வெள்ளிக்கிழமை திருவோண நாளில் இந்த ஆலயத்தில் பெருமானுக்கு விஷேச அபிஷேக ஆராதனையும் ஐயப்பன் சரண கோஷமும் மிகச்சிறப்பான முறையில் நடைபெறவுள்ளன. இவ்வாலயத்தைச் சிவபாதசுந்தரக் குருக்கள் அருணாசலக் குருக்கள் குருசுவாமியாக இருந்து ஐயப்பன் பக்தர்களின் உதவியுடன் சிறந்த முறையில் வழிநடத்தி வருகின்றார். மேலும் இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற முக்கிய திருப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு அடியார்கள் தங்களால் இயன்றளவு நிதியுதவியோ, பொருள் உதவியோ செய்து ஐயப்பன் திருவருளைப் பெற்றுக்கொள்வீர்களாக.

ஆவணி ஓணப் பெருவிழாக் காண ஐயப்பன் அடியார்கள்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

*மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.* (91730) சிவஸ்ரீ அருணாசலக்குருக்கள்.



*யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு நற்செய்தி!* இதோ!!

# மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்!

நிகழும் விஷு வருஷம் ஆவணித் திங்கள் 14ஆம் நாள் இன்று (30.08.2001) வியாழக்கிழமை
நண்பகல் 12.00 மணிக்கு வரும் சுப முகூர்த்தத்தில்

## பிறின்ஸி சில்க்ஸ்

என்னும் புதியதோர் ஸ்தாபனத்தை
இல.9, நவீன சந்தையின் உட்புறத்தில்
ஆரம்பிக்கின்றோம் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

இல. 34, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தில் கடந்த மூன்று வருட காலமாகச் சிறப்பான சேவையாற்றி வந்த **பிறின்ஸி சில்க்ஸ்** ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் கிளை நிறுவனத்தைத் தொடங்கியுள்ளோம் என்பதை உவகையுடன் உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இத்திறப்பு விழாவைச் சிறப்பிக்க வருகை தருமாறு எமது அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இரு கரம்கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.

(C/18063)


# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம்

### கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம), பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால் 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணி வரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் 'இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரங்களை 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|---|
| சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் நிர்மாணித்தல், கோப்பாய் கட்டம் 1 | எம்-9 | ரூபா 45 00/= | ரூபா 250/= |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம், மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

**பிரதம பொறியியலாளர்,**
***யாழ்ப்பாணம்.***

(C/18060)

நடமாடும் சேவையில் கையளித்த

# அடையாள அட்டை விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களுக்குத் திரும்பின

கோண்டாவில்,ஓக.30

வடமாகாண அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சு யாழ்.மாவட்டத்தில் நடத்திய நடமாடும் சேவையின போது கையளிக்கப்பட்ட அடையாள அட்டை விண்ணப்பங்கள பல, பிரதேச செயலகங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் நிவர்த்தி சேவையின் போது கையளிக்கப்பட்ட நூற்றுக் கணக்கான விண்ணப்பங்களே மூன்று மாத இடைவெளியின் பின்னர் திரும்பி வந்துள்ளன. அவற்றில் தவறுகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டே திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

உரிய இடத்தில் அடையாள அட்டைகள் பெறமுடியும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையில் கையளிக்கப்பட்ட விண்ணப்பங்களே இவ்வாறு திரும்பியுள்ளன. (க-86)

# விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய விசேட கலந்துரையாடல்

## அமைச்சர், அரச அதிபர் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளவுள்ள இக்கலந்துரையாடலில் விவசாயிகள் தமது பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறவுள்ளனர்.

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள விவசாயிகளது பிரச்சினைகள் மற்றும் குடாநாட்டில் மண் ஆய்வு நிலையம் ஒன்றை அமைப்பது உட்படப் பல விடயங்கள் பற்றி இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன், 'சீட்கோ' பொது முகாமையாளர் எஸ்.சிவலோகநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

விவசாயிகளையும், விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (க-10)

# பாலியல் வல்லுறவு சந்தேக நபர் ஆலயத் திருட்டில் பிடிபட்டார்

தென்மராட்சி,ஓக.30

பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வேளையில் தப்பியோடி, பொலீஸாரால் தேடப்பட்டுவந்த நபர், பருத்தித்துறைப் பகுதியில் உள்ள இந்து ஆலயம் ஒன்றில் திருடிய வேளையில் பிடிபட்டுள்ளார்.

பாலியல் வல்லுறவு, சிறையிலிருந்து தப்பியது, திருட்டு உட்பட நான்கு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான கிட்டினன் நிஷாந்தன் (வயது 20) என்பவரைக் கடந்த வாரம் பருத்தித்துறை பொலீஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அன்றைய தினம் திருட்டுச் சம்பவம் தொடர்பான அணிவகுப்பை நடத்துமாறு பொலீஸாரைப் பணித்தார். (க-117)

# பற்றைகள் சூழ்ந்து காணப்படும் கந்தரோடை இந்து மயானம்

வலி.தெற்கு,ஓக.30

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள முக்கிய இந்து மயானமாகிய கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானம் நீண்டகாலமாக புனரமைப்புகள், சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறாமையால் மயானத்துக்குச் செல்லும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மயானம் முழுவதும் முள்ளும், கடுகுநாவல் பற்றைகளும் வளர்ந்து மூடிக் கிடக்கின்றன. மயானத்துக்குச் செல்லும் ஒடுங்கிய பாதை முழுவதும் முள்ளுகள் வளர்ந்துள்ளன. கால்நடையாகவோ வாகனங்களிலோ மிகுந்த அவதானிப்புடனேயே மக்கள் அங்கு செல்லவேண்டி உள்ளது.

பிரேதங்களை எரிப்பதற்காக முன்னர் போடப்பட்டிருந்த தகரக் கொட்டகை இருந்த இடம் தெரியாமல்போய், வெளியான ஒரு இடத்திலேயே பிரேதங்கள் எரிக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் தங்கக்கூடிய கட்டடத்தில் இருந்த ஓடுகள் பெரும்பாலனவை திருட்டுப் போய்விட்டன.

மழைகாலம் நெருங்குவதால், அக்காலத்தில் பிரேதம் எரிக்கச் செல்பவர்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதால் சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஊர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-152)

## ஆடு, கோழி வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு

காரைநகர்,ஓக.30

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேலணை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினால் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு தொடர்பான கருத்தரங்கு ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 20 பயனாளிகள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் - பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருவதாகவும் - தெரிவிக்கப்படுகிறது. (ம-73)

# மரண அறிவித்தல்

## திருமதி அப்புத்துரை அன்னப்பிள்ளை

(சின்னத்தங்கச்சி)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை அன்னப்பிள்ளை நேற்றுமுன்தினம் (28-08-2001) செவ்வாய்க்கிழமை சிங்கப்பூரில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி வி.பொன்னுப்பிள்ளை
(சகோதரி)

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.* (91737)

### கடும் வரட்சி காரணமாக

# ஊர்காவற்றுறைப் பகுதியில் குடிதண்ணீருக்குப் பஞ்சம்

ஊர்காவற்றுறை,ஓக.30

ஊர்காவற்றுறையில் தம்பாட்டி, மெலிஞ்சிமுனை ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தற்போது நிலவும் வரட்சி காரணமாக மோசமான குடிதண்ணீர் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசங்களில் தரைக் கீழ்நீர் உவர்த்தன்மை மிகுந்ததாகக் காணப்படுவதனால் இப்பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் இப்பிரதேசங்களுக்கு பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப் படுகின்ற போதும் இவை தமக்குப் போதுமானதாக இல்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய வரட்சியினால் குடிதண்ணீர் நிரப்பும் ஒரு சில தண்ணீர் கிணறுகளும் வற்றி விட்டதாகவும்-

இத்தகைய கிணறுகளிலிருந்து தொடர்ந்தும் தண்ணீர் எடுக்கப்பட்டு வருவதனால் அவையும் உவர்நீர்த் தன்மை கொண்டதாக மாறிவருவதாகவும் -

இதனால் இத்தகைய பிரதேசங்களுக்கு குடிதண்ணீரை விநியோகிப்பதில் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளதாகவும் - பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் நாரந்தனையில் நடைபெற்ற ஊர்காவற்றுறை பிரதேச செயலக நடமாடும் சேவையிலும் இக்குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பாகப் பலரும் பிரஸ்தாபித்திருந்தனர்.

கடல் நீர்த்தடுப்பு அணைகள் மிக நீண்டகாலமாகப் புனரமைப்பு செய்யப்படாத நிலையில் தூர்ந்து போயுள்ளன. மாரி காலங்களில் கடல் நீர் நிலப்பகுதிக்குள் கணிச மான அளவு பெருக்கெடுப்பதால் இப்பிரதேசங்களில் நிலக்கீழ் நீர் உவர்நீர்த் தன்மை கொண்டதாக மாறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

இப்பிரதேசங்களில் மக்கள் மீளக் குடியேறி 7 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் இன்னமும் பூர்த்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-16)

நன்றி! நன்றி!

## உளப்பூர்வ நன்றிகள்!!!

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில்

க.பொ.த. உயர்தர வகுப்பை உடன் ஆரம்பிக்க அனுமதி பெற்றுத் தந்த தோடு, எம் வித்தியாலய கட்டடத் தேவைகளுக்காக ரூபா 10,00 000 நிதி ஒதுக்கித் தந்து எமது மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஊக்கம் கொண்டு உழைக்கும்,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களையும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**உயர்திரு.K.V.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும்



ஈ.ம.ஜ.கட்சியின் தீவக பிரதம அமைப்பாளர்

**உயர்திரு.ந.மதனராஜா (மனோ)** அவர்களையும்



ஈ.ம.ஜ.கட்சியின் நெடுந்தீவு அமைப்பாளர்

**உயர்திரு.K.நவநீதன் (மோகன்)** அவர்களையும்

நெடுந்தீவுப் பிரதேச சபைத்தலைவர்

புலவர் **A.W.அரியநாயகம்** அவர்களையும்

பணி சிறக்க வாழ்த்தி எமது உளப்பூர்வ நன்றிகளை உவகையுடன் நவில்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
நெடுந்தீவு. யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம். (91738)


## விற்பனைக்கு

வெங்காயம் பொதி செய்யும் நெற்பாக் (Bag), வெங்காயம் பொதிசெய்யும் வெற்று மரப்பெட்டிகள் மற்றும் சகல அளவுகளிலும் உள்ள ரெஜிபோம்சீற் மற்றும் புடைவைக்கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ் என்பன விற்பனைக்குண்டு.

ஸ்ரீராம் நாதன் களஞ்சியம்,
213C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (91733)

## மலிவு விலையில் கோழிக்குஞ்சு விநியோகம்
## அரச பண்ணை (N.L.D.B.)

பிறவுண் புறொயிலர் பேட்டுக்குஞ்சு, பிறிமா புறொயிலர் பேட்டுக்குஞ்சு என்பனவற்றின் சபிலா பிறவுண் புறொயிலர், நியூற்றினா பிறவுண் புறொயிலர், பையிலர் பிறவுண் புறொயிலர், கிறின்வில்லி புறொயிலர், ரவிபாம் புறொயிலர் போன்ற இனக்கோழிக்குஞ்சுகளை 05.09.2001க்கு முன் பெற்றுக் கொள்ள முடியும். பதிவுகளை முன்கூட்டியே செய்யவும் .

குறிப்பு:- கோழிக்குஞ்சுகளுக்கான மருந்துகள் இலவசமாக வழங்கப்படும்.

*பதிவு செய்யவேண்டிய முகவரி:-*
61, அரசடி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021-2050 (91739)


## மருதனார்மடத்தில் நினைவஞ்சலி கூட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரின் 16 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உடுவில் கிராம சபையின் முன்னாள் தலைவர் ச.முத்துலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் க.சிற்றம்பலம், மருதனார்மடம் குருமட போதகர் எஸ்.பி.ஜெயசிங்கம், வலி.தெற்கு கோட்டக் கல்வி அதிகாரி அ.தற்பரானந்தன், இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, சி.சிவ மகாராசா ஆகியோரும் -

யாழ். மாநகர சபை முதல்வர் என்.ரவிராஜ், வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் உட்பட மற்றும் பலர் நினைவுப பேருரைகளை நிகழ்த்தவுள்ளனர். (க-4)

## அபராதம்

தென்மராட்சி,ஓக.30

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் அனுமதியின்றி வீடுகளில் கள்ளு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட 15 பேருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் 46 ஆயிரத்து 650 ரூபாவினை அபராதமாக விதித்துள்ளார்.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் நேற்றுமுன்தினம் இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதே நீதிவான் அபராதம் விதித்துள்ளார். -(ம-117)


**நாகம்ஸ்** சுன்னாகம்

மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த

**டும் டும் டும்** (ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்) (91734)

**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித், மாளவிகா நடிப்பில்

**உன்னைத்தேடி**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
(ஞாயிறு போயா தினம் காட்சிகள் இல்லை) (C/17875)

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## மக்கள் சேவையில் மகத்தான பத்தாண்டுகள்

மேற்படி சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும். ஆறுபேர் கொண்ட பத்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி.

நடைபெறும் இடம்:- யாழ்.கொய்யாத்தோட்ட சனசமூக நிலைய மைதானம்.

காலம்: 01, 02-09-2001 (சனி, ஞாயிறு)
08, 09-09-2001 (சனி, ஞாயிறு)
15, 16-09-2001 (சனி, ஞாயிறு)

நேரம்: காலை 8.30 மணி (புதியநேரம்)

போட்டிகளின் விபரப்பட்டியலை தலைமைச் செயலகத்திலும், விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொண்ட பேக்கரிகளிலும் பெற்றுக் கொள்ளலாம். போட்டிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாகும்.

(C/18057) - நிர்வாகம்.


## துயர் பகிர்கின்றோம்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை சித்திரமும் வடிவமைப்பும் முதலாம் வருட மாணவன் யே.ஸ்ரீகாந்த் அவர்களின் பாசமிகு தந்தை

### அவுராம்பிள்ளை யேசுதாசன்

அவர்கள் நேற்று (29.08.2001) புதன்கிழமை இறைவனடி சேர்ந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.* (91743)

முதலாம் வருட மாணவர்கள்,
சித்திரமும் வடிவமைப்பும்,
இராமநாதன் நுண்கலைத்துறை.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா மாசிலாமணி

ஆனைக்கோட்டை றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த கந்தையா மாசிலாமணி நேற்று (29.08.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னலட்சுமியின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருபாணந்தன், பிறேமானந்தி (சுவிஸ்), திருமாமணி (சுவிஸ்), சகுந்தரி (நோர்வே), காலஞ்சென்ற குகன் (நோர்வே), அகிலா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலநாதன் (சுவிஸ்), சிவதர்சினி (சுவிஸ்), டினேஸ் (நோர்வே), சடாச்சரம் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவந், சயந், சுயீட்ஷா, கீர்த்திகா, கயானன் ஆகியோரின் பாட்டனாரும் அரியமலர் (திருகோணமலை), தேவராசா (கொழும்பு), மகிழ்மலர் (கனடா), அன்னலிங்கம், சிவபாக்கியம், வரதராசலிங்கம், ஜெயமலர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*111, ஆனைக்கோட்டை றோட்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (91742)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## சபாபதிப்பிள்ளை பரஞ்சோதி

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் ஆடியபாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கோண்டாவில் லிங்கோ லுப்பிறிக்கேசன் சேவிஸ் உரிமையாளராகிய சபாபதிப்பிள்ளை பரஞ்சோதி நேற்று (29.08.2001) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற றோசம்மாவின் அன்புக் கணவரும் சண்முகலிங்கம் ((முன்னாள் கோண்டாவில் லிங்கோ லுப்பிறிக்கேசன் சேவிஸ் உரிமையாளரும், இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும்; தற்போதைய உரிமையாளர் லக்சுமி ஸ்ரோர்ஸ் நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு) அவர்களின் பாசமிகு சகோதரனும் கமலாம்பிகையின் அன்பு மைத்துனரும் சத்தியதேவி, சியாமளாதேவி (ஆசிரியர் நல்லூர் முத்தமிழ் பாலர் பாடசாலை), மஞ்சுளாதேவி (யாழ்.மாநகரசபை), நிர்மலாதேவி (யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), யசோதராதேவி, சசிதரன் (லக்சுமி ஸ்ரோர்ஸ் நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையாரும் காலஞ்சென்ற நா.ஏகாம்பரம் - வனிதாமணிதேவியின் சம்மந்தியும் விக்னராஜா (யாழ் ரெலிக்கொம்), பாஸ்கரன், ஞானசேகர், சந்திரன், விக்னேஸ்வரி, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஷன் (மாணவன் யாழ்.மத்திய கல்லூரி), நிலுக்ஷிகா, பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2001) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆடியபாதம் வீதி, நல்லூர்.*
(C/18065)

தகவல்:
ச.சண்முகலிங்கம் (சகோதரன்)

## சுப்பையா பரமேஸ்வரன்

(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

மாத்தனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட் சுப்பையா பரமேஸ்வரன் கடந்த 27 ஆம் திகதி அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - செல்வநாயகியின் அன்பு மகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், மீரா (U.K.), சுரேஸ்வரன் (கனடா), சுமித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமசுதர்சனின் அன்பு மாமனாரும், நீலாயதாட்சி, இராஜேஸ்வரி, கருணாகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலிங்கம், குலேந்திரசிங்கம், குகேந்திரராணியின் மைத்துனரும், இராஜசிங்கம் பத்மலா, கிருஷ்ணா, கீதா, சீதா, முகுந்தா, மதுராவின், அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-08-2001) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலை 591,காலி வீதி, கல்கிசையில் நடைபெற்று அண்டர்ஸன் வீதி, தெஹிவளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C/18064)

தகவல்:
R.சந்திரகுமார் (மருமகன்)

## புலிகளுடன் பேசுவோம் என்று கூறினால் மட்டும் போதாது

# தமிழீழத்துக்கு மாற்றீடு எது என்பதை பொ.ஐ.மு. தெளிவுபடுத்த வேண்டும்

## அரசுடனான பேச்சில் தாம் வலியுறுத்தியதாக ஐ.தே.க. கூறுகிறது

கொழும்பு,ஒக.30

புலிகளுடன் பேச்சு நடத்துவோம் என்று கூறிக்கொண்டால் மட்டும் போதாது. பேச்சுக்களின் போது புலிகளின் முக்கிய கோரிக்கையாக அமையப்போகும் தமிழீழத்துக்கு மாற்றீடாக நாம் எதை கொடுக்கப்போகிறோம்? புலிகளுக்கு வழங்கும் அதிகாரங்கள் யாவை? - என்பவை குறித்தெல்லாம் திட்டவட்டமாக அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று பொ.ஐ.முன்னணிப் பிரதிநிதிகளுடனான பேச்சுக்களின் போது நாம் வலியுறுத்தினோம்.

- இவ்வாறு கூறினார் ஐதேகட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் பெர்னாண்டோ.

பொ.ஐ.முன்னணி - ஐதேக. பிரதிநிதிகளுக்கு இடையில் மூன்று நாள்கள் இடம்பெற்ற பேச்சுக்கள் முறிந்தது தொடர்பாகத் தெரிவிப்பதற்காக செய்தியாளர் மாநாடு ஒன்றை ஐதேக. ஏற்பாடு செய்திருந்தது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ஐதேகட்சிப் பிரதித் தலைவரும் எம்பியுமான கரு ஜயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான தேவன்ஜோசப், கருணாசேன ஹொடித்துவக்கு, டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

பொ.ஐ.முன்னணியின் பிரதிநிதிகளுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக அவர்கள் அங்கு தெரிவித்ததாவது:-

மதத் தலைவர்களும், அரசியல் அவதானிகளும், புத்திஜீவிகளும், வர்த்தக சமூகத்தினரும் ஏகோபித்த குரலில் விடுத்த கோரிக்கையை ஏற்றே நாங்கள் அரசுடனான பேச்சுக்களில் பங்குகொண்டோம். திறந்த மனதோடும், புரிந்துணர்வோடும் விட்டுக்கொடுப்புக்களுடனும் நாம் பேச்சுக்களின் போது எமது தரப்புக் கோரிக்கையை முன்வைத்தோம்.

ஆனால் அரசாங்கத்தின் பிடிவாதமும், தான்தோன்றித்தனமான போக்கும் பேச்சுக்களைத் தோல்வியில் முடிவடையச் செய்துவிட்டன.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலைக்கு நாடாளுமன்றின் ஊடாகவே தீர்வுகாண வேண்டும். இல்லையேல், நாடாளுமன்றுக்கு வெளியிலாவது பேச்சுக்களின் மூலம் தீர்வு எட்டப்படலாம் என்ற யோசனைகளை நாம் அரசுடனான பேச்சுக்களின்போது முன்வைத்தோம். ஆனால் அரசு அவற்றையெல்லாம் நிராகரித்துவிட்டது.

அரசுப் பிரதிநிதிகளுடனான பேச்சுக்களின்போது பிரதான விடயங்களாக நாடாளுமன்றத்தை மீளத் திறப்பது, சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்வது, ஐந்து சுதந்திர ஆணைக் குழுக்களை அமைப்பது என்பவற்றை நாம் வலியுறுத்தினோம். எனினும் அரசு அவற்றை மறுத்துவிட்டது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டிய பின்னர் தொடர்ந்தும் அமர்வுகள் இடம்பெறவேண்டும். எக்காரணம் கொண்டும் நாடாளுமன்றம் மீண்டும் ஒத்திவைக்கப்படக்கூடாது.

நாடாளுமன்றில் பெரும்பான்மையைத் தக்கவைக்க அரசு தவறிவிட்டது. ஆகவே நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் உள்ள கட்சிக்கு அரசமைக்கும் அதிகாரத்தை வழங்கவேண்டும்.

1994 ஆம் ஆண்டு முற்பகுதியில் டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது தனது கட்சி நாடாளுமன்றப் பெரும்பான்மையை இழந்ததும், அமைச்சரவையைத் தெரிவு செய்வதற்கு அப்போது நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த கட்சியின் தலைவரான சந்திரிகாவை அமைச்சரவையை அமைக்க அழைத்திருந்தார். அதேபோன்ற நடைமுறையையே நாம் தற்போதைய அரசிடம் எதிர்பார்க்கிறோம்.

இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் அரசு ஒத்துப்போவதாக இல்லை.

நாடாளுமன்றில் செல்வாக்கை இழந்த பிரதமரை உப ஜனாதிபதியாகவும், அமைச்சராகவும் நியமிக்கும் யோசனையை அரசு முன்வைத்தது.

அரசு இன்று எதிர்நோக்கும் நெருக்கடி மிக்க சூழ்நிலையில் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு நாம் யோசனையை முன்வைக்க, அரசு உப ஜனாதிபதி பதவி போன்ற புதிய புதிய பதவிகளை உருவாக்குவதில் அக்கறை காட்டுகிறது.

நாம் தமிழ், முஸ்லிம் உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தினதும் பிரதிநிதிகளாகவே அரசுடன் பேசினோம்.

விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு வருமாறு இருதரப்பினரும் இணைந்து கூட்டாக அழைப்பு விடுப்பதற்கு ஐதேகட்சி இணங்கியிருந்தது. முதல் நாள பேச்சுக்களின்போதே நாம் இதற்கான விருப்பத்தைத் தெரிவித்திருந்தோம்.

ஆனால் அரசுக்கும் ஐதேகட்சிக்கும் இடையிலான பேச்சுக்களில் இணக்கம் ஏற்படாமையால் இதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

- இவ்வாறு மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

## சிறையில் இருப்பவரை பார்வையிட அனுமதி தர மறுத்த பொலீஸார்

### அதிகாரி தலையீட்டினால் தீர்வு

யாழ்ப்பாணம்,ஒக.30

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை அவரது உறவினர்கள் பார்வையிடுவதற்கு அச்சுவேலிப் பொலீஸார் அனுமதி வழங்க மறுத்த விவகாரம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியின் தலையீட்டினால் தீர்க்கப்பட்டது.

இம்மாதம் முதலாம் திகதி காங்கேசன்துறைப் பொலீஸாரினால் வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட பெரியபொக்கணை, வாதரவத்தையைச் சேர்ந்த சபாரட்ணம் முருகானந்தம் (வயது 39) என்பவரையே அவரது உறவினர்கள் பார்ப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அவரைப் பார்ப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காகப் பல தடவைகள் அச்சுவேலிப் பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற உறவினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் காங்கேசன்துறைப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டமையினால் அவர்களிடமே அவரைப் பார்ப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி நபரின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முறையிட்டனர்.

ஆணைக்குழுவின் அதிகாரி ஜீவேஸ்வரா இந்த விடயம் தொடர்பாக-

குறிப்பிட்ட நபரின் வதிவிடம் அச்சுவேலிப் பொலீஸாரின் எல்லைக்குள் அடங்குவதாலும், காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையம் உயர்பாதுகாப்புப் பிரதேசத்தினுள் இருப்பதால் அங்கு பொதுமக்கள் எவரும் செல்ல முடியாது என்பதாலும் அனுமதியை அச்சுவேலிப் பொலீஸாரே வழங்க வேண்டும் என்று தெரிவித்து பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கும் தனித்தனியாகக் கடிதங்களை அனுப்பி வைத்தார்.

இதனையடுத்து குறிப்பிட்ட நபரைச் சிறைச்சாலையில் பார்வையிடுவதற்கான அனுமதி உடனடியாக அவரின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

### புலிகளின் பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்கப்படுகிறது.

ஒரு நல்லெண்ண புறச்சூழ்நிலையில் - யுத்தநிறுத்தம் செய்து - புலிகள் மீதான தடை நீக்கப்பட்ட நிலையில் - அரசுடன் சமமாக இருந்து பேசுவதே புலிகளின் விருப்பம் என்பதை அவர்களின் பல அறிவிப்புக்கள் வெளிப்படுத்தியுள்ளன.

பேச்சு, யுத்தநிறுத்தம் ஆகியவை குறித்து தனக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ள அரசு, புலிகள் மீதான தடையை நீக்குவது பற்றி எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை.

விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்காதவரை நேரடிப் பேச்சுக்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவே என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

"கொழும்பில் ஸ்திரமான அரசு ஒன்று ஆட்சிக்கு வரும்வரை, இலங்கை அரசுத் தரப்புடன் சமாதானப் பேச்சு ஒன்று குறித்து ஆராய்வதற்கே வாய்ப்பில்லை" - இவ்வாறு லண்டனில் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் கடந்த வெள்ளியிரவு உதயனுக்குத் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு வந்துள்ள நோர்வேயிலும் இப்போது தெளிவான அரசியல் நிலைமை இல்லை. எதிர்வரும் 10 ஆம் திகதி அங்கு நடைபெறும் தேர்தலுக்குப் பின்னரே அங்கும் ஸ்திரமான அரசு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே அரசின் தற்போதைய அறிவிப்பை புலிகள் சாதகமாகப் பரிசீலிப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவு என்றே கருதப்படுகிறது.

(உ-7)

### இளம் பெண்ணின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறைய வைத்து, ஹெலிக்கொப்டர் மூலம் அவசர சிகிச்சைக்கு தமது பெண்ணுடன் அனுப்பி வைத்தார் சம்பந்தப்பட்ட டாக்டர். வெட்டுண்ட தமது பெண்ணின் கையை 'மைக்ரோ சேர்ஜரி' மூலம் மீண்டும் பொருந்த வைக்கமுடியும் என்று அந்த டாக்டர் கருதுவதாகக் கூறப்பட்டது. திருகோணமலைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (உ)

### எதிர்க்கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரல் தொடர்பான மாதிரி ஒன்றும் சபாநாயகரிடம் நேற்று எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த 15 ஆம் திகதி எதிர்க் கட்சிகளின் 115 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூடி எடுத்த ஆறு தீர்மானங்கள் அடங்கிய பிரதி ஒன்றும் சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டது.

செப்ரெம்பர் ஏழாம் திகதி நாடாளுமன்றம் கட்டாயம் கூட்டப்படவேண்டும், அன்றைய தினமே அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படவேண்டும், பிரதம நீதியரசர் மீதான குற்ற விசாரணைப் பிரேரணையும் விவாதத்துக்கு எடுக்கப்பட வேண்டும் என்பன உட்பட ஆறு கோரிக்கைகள் அந்தத் தீர்மானங்களில் அடங்கியுள்ளன.

இதேவேளை - நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கே பெரும்பான்மைப் பலம் உண்டு என்பதால் எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரல் படியே செப்ரெம்பர் ஏழாம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடைபெற வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு சபாநாயகர் நேற்றைய கூட்டத்தில் பச்சைக் கொடி காட்டியதாகவும் கூறப்பட்டது.

இதற்காக ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 115 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை சபாநாயகர் எதிர்க்கட்சிகளின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றாகச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

(ம)

தரம் -5
புலமைப் பரிசில்
2002
புலமைப் பரிசில் வகுப்பும் பயிற்சிப் பரீட்சையும்
ஆரம்பம்: 01-09-2001 சனி
பி.ப.3மணி
அடிப்படை அறிவில் இருந்து கற்பிக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிறும் விசேட பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.
1st பரீட்சை 02-09-2001 ஞாயிறு காலை 8.30 (பு.ப.)
வெளியோர்களும் பரீட்சை எடுக்க முடியும்.
புலமைப் பரிசில் வகுப்புக்களுக்கான தனித்துவம் பெற்ற நிறுவனம்.
நாவலர்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

Internet & E-mail
BATCH II & III
Duration 1 Month
Start:01-09-2001
Sat, Sun: 3.30 pm
Tue, Thu: 4.30 pm
மேலதிக விபரங்களிற்கு
STP In touch with your World
54A, Palaly Road, Kanthermadam
T.P:2674, E.mail: stpedu@hotmail.com

### மருத்துவ பீட புகுமுக மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக.30

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட புகுமுக மாணவர்களுக்கான மருத்துவக் கல்விக்கு முன்னதான அடிப்படை கற்கைநெறி அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதற்காக புகுமுக மாணவர்கள் (24ஆம் அணி) அனைவரையும் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 8 மணிக்கு மருத்துவ பீடத்துக்கு வருமாறு மருத்துவ மாணவர் மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ம)

### யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது. விடுதலைப் புலிகளை நேரடிப் பேச்சுக்கு அரசு அழைக்கும். இது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

பேச்சுக்கு வழிவகுக்கும் விதத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் கீழ் விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்யவும் அரசு தயாராக இருக்கின்றது.

மிக முக்கியமான ஒரு வாய்ப்புக் குறித்து நாம் ஆலோசித்து வருகின்றோம். இதற்கான காலக்கெடு இன்னதுதான் என்று என்னால் இப்போது கூற முடியாது.

புலிகளும் போரால் பயனேதும் கிட்டாது என்பதை உணர்ந்துகொண்டு விட்டனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் அரசும் சேர்ந்து ஒன்றாகப் புலிகளைப் பேச்சுக்கு அழைத்திருந்தால் அது இன்னும் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

ஐ.தே.கட்சியுடனான பேச்சில் இதை ஒரு முக்கிய விடயமாக நாம் முன்வைத்தோம். ஆனால் ஐ.தே. கட்சி உடன்பாட்டுக்கு வராமல் முறித்துக்கொண்டு விட்டது. இதனால் இரண்டு பெரிய கட்சிகளும் சேர்ந்து புலிகளை ஒன்றாகப் பேச்சுக்கு அழைக்கும் வாய்ப்புத் தவறிப்போய் விட்டது - என்றார் அமைச்சர் கதிர்காமர்.

"கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தம் அறிவித்தபோது அதனை ஏற்றுக்கொள்ளாத அரசு இப்போது ஏன் யுத்தநிறுத்தம் செய்து பேச்சு நடத்த முன்வந்தது?" - என்று செய்தியாளர்கள் கேட்டதாகவும் -

"அப்போது விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் முழுமையான ஈடுபாட்டுடன் நடந்து கொள்கின்றார்களா என்ற சந்தேகம் அரசுக்கு இருந்தது. இப்போது அது நீங்கிவிட்டது" - என்று அமைச்சர் கதிர்காமர் பதிலளித்தார் என்றும் இந்தியத் தொலைக்காட்சி தெரிவித்தது

(உ-ம-7)

## மரண அறிவித்தல்

### வேலாயுதர் நல்லதம்பி (வித்துவான்)

(முன்னாள் ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி, இளைப்பாறிய அதிபர் - யா/ஏழாலை தெற்கு சைவத் தமிழ் கலவன் வித்தியாசாலை, முன்னாள் தலைவர் - சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதர் நல்லதம்பி அவர்கள் 27-08-2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் - ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகமுத்து - முத்துப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் நேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு (இளைப்பாறிய ஆசிரியர்), மயில்வாகனம் தில்லையம்மா, கண்மணி, முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிராசா, பொன்னுத்துரை (இளைப்பாறிய பிரதி அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), சின்னராசா (இளைப்பாறிய ஆசிரியர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), கணேசு (இளைப்பாறிய கமத்தொழிற் திணைக்களப் பொறியியற் பணிப்பாளர்) ஆகியோரின் மைத்துனரும், சத்தியவதி (கொழும்பு), குமரவேள் (சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்), நளாயினி, அமிர்தநாயகி விக்கினராஜா (லண்டன்), பங்கயற்செல்வி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தகப்பனாரும், கருணானந்தம் (உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு), சிவகுமாரன் (ஆசிரியர், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), கணேசலிங்கம் (ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்), சுரேஸ்குமார் (ஆஸ்திரேலியா), புனிதவதி (ஆசிரியர், யா/சுதுமலை அ.த.க. பாடசாலை), விமலினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், இராகுலன், விநோதினி, ஜெயராம், கரிஷன், அரிகரன், கோகுலராம், மாதங்கி, வீணாவாகினி, மதுராந்தகி, நிருபிகா, நிருபிகன், கரிஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ந. குமரவேள்
(மகன்)

இணுவில் தெற்கு. (C/18066)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.